4

1.12.56

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

1224
16 DEC 1956
MADRAS

.2

செய்திகள்

சென்னையின் புதிய கவர்னர்

திருத்தியமைக்கப்பட்ட நமது புதிய சென்னை ராஜ்யத்துக்கு, கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த திரு ஏ. ஜே. ஜான் என்பவர் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது பதவியிலிருந்து விலகும் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா பம்பாய் ராஜ்யத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இருவரும் டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி தம் பதவியை ஏற்பார்களாம். புதிய கவர்னர் முன்பு கேரள ராஜ்யத்தின் முதல் அமைச்சராக இருந்திருக்கிறார்.

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் விபத்து

சென்னையிலிருந்து நவ. 22 தேதியன்று இரவு புறப்பட்ட தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் மிகப் பெரிய விபத்துக்குள்ளாகியது. அரியலூர் என்ற ஊருக்கும் கல்லகம் என்ற ஊருக்கும் இடையே ஓடுகிற மருதையாறு என்ற காட்டாற்றுப் பாலத்தில் அதன் முன்பகுதி முழுவதும் விழுந்து விட்டது. முன் ஏழு பெட்டிகள் தூள் தூளாகச் சிதறிவிட்டன. சுமார் இருநூறு பேர்கள்போல் உயிரிழந்துவிட்டார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் பலத்த காயமடைந்திருக்கிறார்கள். சமீபத்தில் பெருமழை பெய்ததும், அதன் காரணமாக காட்டாற்றில் வெள்ளம் வந்து, பாதையை அரித்ததும்தான் விபத்துக்குக் காரணம் என்கிறார்கள். உயிரிழந்தவர்களுக்கும் விபத்துக்குள்ளானவர்களுக்கும் அநுதாபம் தெரிவித்து ஜனாதிபதி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இத்தகைய பெரிய விபத்து தென்னாட்டில் இதுவரையில் நேர்ந்ததில்லை என்று சொல்லுகிறார்கள். விபத்தை ஆராய்வதற்கும் விசாரணைக்கும் நஷ்டஈடு அளிப்பதற்கும் தனியே குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக இந்திய ரெயில்வே மந்திரி ராஜிநாமாகூடச் செய்திருக்கிறார். விபத்துக்குள்ளானவர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேசீய மாணவர் படை

தேசீய மாணவர் படையினர் எட்டாவது ஆண்டுவிழா டிஸம்பர் இரண்டாம் தேதியன்று கொண்டாடப்பட இருக்கிறது. அதற்கு ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் தம் வாழ்த்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்.

பிரதமர் நேரு அமெரிக்கா செல்கிறார்

அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவரின் அழைப்புக்கு இணங்க பிரதம மந்திரி நேரு டிஸம்பர் 14-ஆம் தேதி அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார். இரண்டு வாரம் போல் அவர் வெளிநாடுகளில் இருப்பார் என்று தெரிகிறது.

சென்னையின் புதிய மேயர்

சென்னை நகரத்துக்கு ஆண்டு தோறும் நவம்பர் மாதத்தில் புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த 1957-ஆம் ஆண்டின் புதிய மேயராக ஸ்ரீ கே. என். ஸ்ரீநிவாஸன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ ராமதாஸ் என்பவர் டெபுடி மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 23

1-12-'56

குழந்தைகளே!	பக்கம்	2
ஜய் ஹிந்த்!	..	3
ஏமாந்தது யார்?	..	4
சைஞ - சு - சூ!	..	5
சாவிலே வாழ்வு	..	11
எனக்கு ஒன்றும் தெரியாது		13
கல்யாண வீட்டில்!	..	14
தீபாவளி போனஸ்	..	17
தாயும் சேயும்	..	21
கவியரங்கம்	..	25
ஐந்தின் பெருமை	..	26
தாடிச் சாமியார்	..	29
உண்மை	..	33
புலிக்குட்டி	..	35
ரிஸல்ட் வந்தது	..	38
உழைத்த பணம்	..	40

அட்டைப் படம்:
N. ராமகிருஷ்ண

செய்திகள் - 2-அட்டை

பேனு நண்பர்கள் - 3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

கண்ணன்

15 - 1 - 1957

கண்ணன்

பொங்கல் இதழில்

புதிய தொடர்கதை

?

எதிர்பாருங்கள்

குழந்தைகளே!

கண்ணன் இதழ் குறித்த காலத்தில் கிடைக்கவில்லை என்று பல கடிதங்கள் எனக்கு வருகின்றன. இது உண்மைதான். இதற்காக நான் வருந்துகிறேன். இரண்டு நாள் ஆனாலும் நீங்கள் காத்திருந்து கண்ணன் வாங்குவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் உங்கள் பொறுமையைச் சோதிக்கலாமா? உங்கள் ஆர்வத்துக்கும் உற்சாகத்துக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? எனவே இனி, இரண்டு நாள் முன்னதாகவே கிடைக்கும்படிச் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்கிறேன். அந்த மனக் குறையை வைத்துக்கொள்ளாதீர்கள்.

இது எனக்கு வருத்தமாக இருந்தாலும் மற்றொரு விதத்தில் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அது என்ன தெரியுமா? நீங்கள் கோபித்துக்கொண்டு காரசாரமாக எழுதியதுதான். கண்ணன் மீது எத்தனை அன்பு இருந்தால் உங்களுக்கு இத்தனை உரிமையோடு கோபம் வரும் என்பது தெரிந்துவிட்டது. உங்களுடைய அளப்பரிய அன்பைத்தான் உங்கள் கோபத்திலே கண்டேன். அதுதான் எனக்கு மகிழ்ச்சியைத் தந்த விஷயம். இந்த அன்புக்கு ஈடு செய்யவேண்டுமானால், இனி உங்கள் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டேன். எனவே புது வருஷத் தொடக்கம் முதல் கண்ணன் புதுப் பொலிவுடன் விளங்குவதுடன்கூட, புது வழக்கமாக இரண்டு நாள் முன்னாலேயே கிடைத்துவிடும் என்றும் நீங்கள் எதிர்ப்பார்க்கலாம்.

புது ஆண்டில் கண்ணனில் பல புதிய மாறுதல்கள் இருக்கும் என்பதை முன்பே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அவற்றில் ஒரு புதிய தொடர்கதையும் ஒன்று. அதுபற்றிய விவரங்களை அடுத்த இதழில் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். புதிய தொடர்கதையோடு கூடவே தொடர்கதைப் போட்டியில் பரிசுபெற்ற கதையையும் வெளியிட எண்ணியிருக்கிறோம். ஆக, இரண்டு தொடர்கதைகள் கண்ணனை அலங்கரிக்கும். புலிக்குட்டி முடிந்ததும் புதிய சித்திரக் கதையும் ஆரம்பமாகும்.

பொங்கல் இதழ் விசேஷ இதழாக இருக்கும். பக்கங்கள்கூடக் கொஞ்சம் அதிகப்படியாகவே ஆனாலும் ஆகும். அருமையான கதைகள், சித்திரக் கதை எல்லாம் அடங்கி யிருக்கும். பொங்கல் தமிழ் நாட்டுக்கே சிறப்பான மங்கள நாள் அல்லவா? கண்ணனும் அந்த நாளைக் கொண்டாட உங்களோடு உரிய முறையில் கலந்து கொள்வான்.

முன்பு 'கண்ணன் தபால்' என்று ஒரு பகுதி வந்துகொண் டிருந்தது, ஞாபகம் இருக்கிறதா? இப்பொழுது 'தபால் பெட்டி' என்று ஒரு பகுதி ஆரம்பமாகிறது. உங்கள் மனத்தில் தோன்றிய கற்பனைகள், கருத்துக்கள், பாட்டுக்கள், துணுக்குகள், அல்லது கண்ணன் கதைகளைப் பற்றிய விமரிசனங்கள் எது வேண்டுமானாலும் எழுதலாம். கிண்டலாக எழுதலாம்; நல்லவற்றைப் பாராட்டலாம். பயனற்றவைகளை எடுத்துக் காட்டலாம். சுருக்கமாகச் சொன்னால் அந்தப் பகுதியில் கலந்துகொள்ள உங்களுக்கு முழுச் சுதந்தரமும் உண்டு. தபால் பெட்டிக்கு இப்பொழுது முதலே நீங்கள் எழுதலாம்.

தொடர்கதைப் போட்டிக் கதைகளைப் பஞ்சாயத்தார்கள் படித்து வருகிறார்கள். முன்னர் குறிப்பிட்டபடி முடிவைத் தெரிவிக்க இயலும் என்று எண்ணுகிறேன்.

ஆசிரியர்



ஜய் ஹிந்த்!

எ. ந. கணபதி

ஜய்ஹிந்த் என்று சொல்லுவோம்
சிரம் குனிந்து வணங்குவோம்.

தேசக் கொடியின் அடியிலே
சிறந்த இந்தத் தினத்திலே
பாசத் தோடு பாலர் நாம்
பாடிச் சுற்றி ஆடியே. (ஜய்)

வீரத் தோடு செல்லுவோம்
வெற்றி நடை போடுவோம்.
தீர முள்ள சிறுவர்நாம்
திலகர் போல வாழுவோம். (ஜய்)

காந்தி என்னும் புனிதரின்
கருணை தன்னைப் போற்றுவோம்
சாந்திக் காக வாழுவோம்
சத்தி யத்தைக் கைவிடோம். (ஜய்)

இந்தி யாவின் தலைவரை
இணையி லாத நேருவைத்
தந்தை என்று ஏற்றுவோம்
தரணி போற்ற வாழுவோம். (ஜய்)

பார தியின் பாடலைப்
பாடி இன்று மகிழுவோம்
வீர தீரச் சிதம்பரம்
வெற்றி தன்னைப் பாடுவோம்

ஜய்ஹிந்த் என்று சொல்லுவோம்
சிரம் குனிந்து வணங்குவோம்.



சைனு சுச்சூ

ஆர்வி

துரைசிங்கத்தின் உத்தரவுப் படியே வாட்சுமேன் பொன்னுரங்கமும், போலீஸ் ஜவான்கள் இருவரும் காவல் போடப்பட்டார்கள். தர்ட்டி தர்ட்டியும் ஹன்டிரடண்ட் லெவனும், 'உன்னுலே நான் கெட்டேன். என்னுலே நீ கெட்டே' என்கிற மாதிரி விழித்துக்கொண்டு நின்றுர்கள்.

அந்தச் சமயத்தில் டெலிபோன் மணி கிணு கிணுத்தது. சீனன் ஷங்கங்கைப் பார்த்தான். அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டு ஷங்கங் எழுந்து சென்று, டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

''ஹலோ!'' என்றுன்.

''ஹலோ, யாரு சீனனு?'' என்று பதில் வந்தது.

''இல்லே. அவன் கூட்டாளி. ஷங்கங்!''

''பேப்பர் விற்கிற பயலா?''

ஷங்கங்கின் முகம் இதைக் கேட்டதும் குன்றிப் போனதுபோல் வாட்டமடைந்தது.

''என்னடா கேட்கிறேன். பதிலேக் காணுேம்.''

''ம்—''

''ஷங்கங்தானேடா?''

''ஆமாம்.''

''பின்னெ முளிக்கிறியே! பேப்பர் விற்கிறவன்னு சொன்னு உன் கௌரவம் போயிட்டுதோ?''

ஷங்கங் இதற்குப் பதில் சொல்லவில்லே. பேசிய குரல் முன்பு எங்கோ கேட்ட குரல் மாதிரியும் இருந்தது. அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லே.

''போலீஸ் புலிகள் எல்லாம் இருக்குதா, போயிட்டுதாடா?''

''ம்....வந்து....ஆமாம்.. இல்லே..'' என்று ஷங்கங் மென்று விழுங்கினுன்.

''ம்..மென்னு முழுங்கறே? உனக்கும் சரியான வழி வைக்க வேண்டியதுதான்! மரியாதையா இருந்தே-பொழைச்சே! இல்லே, அந்தப் பய தைரியத்திலே கொஞ்சம் துளுத்துப் போனே, தலே போயிடும்! என்ன?''

''நான் ஒண்ணும்..''

''இன்னிக்கே சீனனே விட்டுட்டு நீ உன் பேப்பர் விற்கிற வேலேக்குப் போயிடணும்..என்ன?''

''ம்..சரி..''

''என்னடா முழுங்கறே? போயிடுவியா?''

''போயிடறேன்..''

''எப்ப?''

''இன்னிக்கேதானே?''

''இன்னிக்கு என்னடா இன்னிக்கு! இப்பவே, இந்த நிமிஷமே. சொல்லிட்டுத்தான் போவியோ, சொல்லாமெத்தான் போவியோ, ஓடிடணும்.''

''........''

''டேய்!''

''ம்—''

''காதிலே விழுந்துதா?''

''விழுந்தது.''

''போறியா?''

''போயிடறேன்.''

''எப்ப?''

''இப்பவே-''

''ஏதாவது வேற மாதிரியா வாயைத் திறந்தின்னு உன்னை என்னு செய்யறது?''

''அதெல்லாம் ஒன்றும் சொல்ல மாட்டேன்.''

''நீயாப் போறதுமாதிரிப் போவியா?''

''போறேன்—''

''ஆமா-போயிடணும். மரியாதையா போயிட்டின்னு உனக்கும் ஏதாவது சில்லறை கிடைக்கும். இல்லியோ, தலையே போயிடும்.''

''சரி.''

''என் குரல் தெரியுதா?''

''ம்..தெரியுது..ஆனு தெரியல்லே!''

''தெரியுதா, தெரியல்லியா?''

''சரியாகத் தெரியல்லே!''

''அதான் கேட்டேன்!''—அடுத்த கணம் அந்தப் பக்கத்து ரிஸீவர் டக்கென்ற ஓசையோடு நின்றது. ஷுங்கங் விளக்கெண்ணெய் குடித்ததுபோல் முகத்தைக் கடுத்துக்கொண்டு சீனனிடம் வந்தான். அவன் காதோடு சுருக்கமாக டெலிபோனில் நடந்த உரையாடலைக் கூறினுன். சிறிது நேரம் ஒன்றும் சொல்லத் தெரியாமல் யோசித்த சீனன் ஒரு முடிவுக்கு வந்தவன் போல, ''டேய், நாம்ப இப்படியே பயந்தா எதுவும் நடக்காது. எதுக்கும் துணிஞ்சு தான் நடக்கணும். நீ எங்கிட்டே சொல்லிட்டுப் போவதுபோல் போயிடு. நாம்ப சு-சூ ஹோட்டல்லே இரவு பத்து மணிக்குச் சந்திப்போம். கையிலே வேண்



டிய பணத்தை எடுத்துக் கொள்.. ஆனால் உடனேயே சந்தேகப் படும்படிப் போகாதே. .இவர்கள் எல்லாரும் போன பிறகு போ!'' என்றான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் மீண்டும் டெலிபோன் மணி ஒலித்தது. இப்பொழுது யார் போய்க் கேட்பது என்று தெரியவில்லை. ''சும்மா நீயே போய்க் கேள்!'' என்றான் சீனன்.

டெலிபோன் என்றாலே இப்பொழுது அவர்களுக்குத் திகிலாகத்தான் இருந்தது. அதில் எந்தச் சமயம் யார் கூப்பிட்டு, யாரை மிரட்டுவார்களோ என்று பயப்பட்டார்கள். ஆனால் இந்தத் தடவை கூப்பிட்டவர் பாரிஸ்டர் தான். பங்களாவில் இரவில் நடந்ததையெல்லாம் சுருக்கமாகக் கேட்டுக் கொண்டதும் அவர், ''சரி, உடனே நீங்கள் எல்லாரும் இங்கே புறப்பட்டு வாருங்கள். நான் வர முடியவில்லை. கலந்து பேசின பிறகு ஒரு முடிவுக்கு வரலாம்'' என்றார்.

சீனனும் ஷங்கங்கும் புறப்படுவதைப் பார்த்து இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் தாமும் வருவதாகச் சொன்னார்.

அடுத்த அரை மணி நேரத்தில் அனைவரும் பாரிஸ்டர் வேதாசலத்தின் அறையில் காணப்பட்டார்கள். அங்கே அவர்களுக்கு முன்னதாகவே அந்தக் கிழவரின் தம்பி மகனான கிங்கிங் உட்கார்ந்திருந்தான். இவர்களைக் கண்டதும் அவன் எழுந்து வராந்தா ஜன்னலருகில் போய் நின்றுகொண்டான். பாரிஸ்டர் ஒவ்வொன்றாக விசாரித்துக் கொண்டே வந்தார். ஷங்கங்கும் சீனனும் மாறி மாறிப் பதில் சொல்லிக் கொண்டே வந்தார்கள். ஆனால் சு-சூ பெட்டியைப்பற்றி மட்டும் அவன் குறிப்பிடவேயில்லை. வாய் தவறிச் சொல்ல இருந்த சமயத்தில், நல்ல வேளையாக அந்தக் கிங்கிங் நிற்பது நினைவுக்கு வந்துவிட்டது. அவன் தங்கள் பேச்சைக் கவனிக்காததுபோல இருந்தாலும், தமிழ் அவனுக்குப் புரியாததுபோல இருந்தாலும் சீனனுக்கு நம்பிக்கையில்லை. அவனைத் திரும்பிப் பார்த்தான். அவன் திரும்பிப் பார்த்த அதே சமயத்தில் கிங்கிங்கும் அவனைப் பார்த்தது தான் ஆச்சரியமாக இருந்தது. இருவர் கண்களும் விசித்திரமாகச் சந்தித்துக் கொண்டன புலியின் கண்களும் பசுவின் கண்களும்போல அவை ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. அந்தப் பார்வையிலே எல்லாம் நிறைந்திருந்தன. முன்பு துறைமுகத்திலே கண்ட காட்சி சீனனுக்கு நினைவுக்கு வந்தது. கிழவரைக் கழுத்தை நெறித்து, கல் முட்டுக்குள்ளே உருட்டித் தள்ளியவன் இவனாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே இப்போது உண்டாகவில்லை.

இவ்வளவு நாள் என்னவோ அந்தச் சந்தேகம் தீராமலே இருந்தது. ஆனால் இன்று திடீரென்று அவனைப் பக்கவாட்டில் பார்த்த போது, அவன் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்ற காட்சி, அந்தக் கிழவருடைய கழுத்தைப் பிடித்த மாதிரியே இருந்தது. அன்று நடந்த சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவன் நினைவிலே திரைப்படம் போல ஓடத் தொடங்கின. அந்தச் சண்டை இந்தச் சு-சூ பெட்டிக்காகவே நடந்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தீர்மானமாகத் தோன்றியது. பெட்டி அவன் கையில் கிடைக்கவில்லை; கிழவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது; அவன் போய் அவருக்கு உதவி செய்தது; இருவரும் சைனீஸ் ரெஸ்டாரண்டுக்கு வந்தது, இரவில் உயில் எழுதியது, அதற்குப் பிறகு இந்தக் கிங்கிங்கை பாரிஸ்டரோடு ஹைக்கோர்ட்டில் பார்த்தது, அவன் இவர்களையே வேட்டை நாய்போல் சுற்றிக் கொண்டு திரிவது, இரவில் டெலிபோன் பேசியபோது பயங்கர உருவத்தில் தோன்றியது, அவன் மயக்கம் போட்டு விழுந்தது, விழித்தபோது சு-சூ பெட்டி காணாமல் போனது எல்லாவற்றிற்கும ஒரு நெருங்கிய சம்பந்தமும் சாத்தியமும் இருப்பதுபோல் அவனுக்கு வெகு தெளிவாகப் பட்டது. வாயைவிட்டே, ''இவன் தான், இவன்தான்! இவனைப் பிடியுங்கள்!'' என்று கத்தலாமா என்று அவன் மனம் படபடத்தது.

பாரிஸ்டர் சீனனுடைய மனப் போக்கை ஒருவாறு உணர்ந்து கொண்டு விட்டார். எதுவும் விபரீதமாகப் போவதற்கு முன், ''தம்பி! இப்படிக் கொஞ்சம் வாங்க!'' என்று அவனைமட்டும் தனியே அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது அந்தக் கிங்கிங் விழித்து முறைத்துப் பார்த்த பார்வை!

சீனனுடைய படபடப்பைக் கண்ட பாரிஸ்டர், ''தம்பி! பதறாமல் இருங்க. எல்லாம் நான் இருக்கிற வரையில் ஒன்றும் பயமில்லை!'' என்றார்.

''இல்லை பாரிஸ்டர் ஸார்! இவன்த்தான் எல்லாவற்றுக்கும் காரணம். முன்பு கிழவரைத் தாக்கியவன் இவன்தான்! நேற்று என் மென்னியைப் பிடித்து இறுக்கியவனும் இவன்தான்! சந்தேகமில்லை. எங்கே வேண்டுமானாலும் நான் சொல்லத் தயார்!'' என்றான் சீனன்.

டேய், கல்கத்தா விமான நிலையத்தின் பேர் என்ன? — இதோ வந்துட்டேன், இரு. — ''சரிதானே? இப்போ தெரிந்ததா?

"நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன், தம்பி! ஆனால் வேறு யார் இதை ஒப்புக் கொள்வார்கள்? அதற்குச் சாட்சி ஏது?"

"சாட்சியா? சாட்சி எதற்கு? நான்தான் சொல்கிறேனே? போதாதா?"

"நீங்க வேண்டும் என்று விரோதத்தினால் சொல்கிறீர்கள்!"

"எனக்கு என்ன அவன் பேரில் விரோதம்?"

"அவனுக்குச் சேர வேண்டிய சொத்து உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கு அவன் போட்டியாக வருகிறான் என்று தெரியும். அதனால்தான் உங்களுக்கு அவனைக் கண்டால் ஆகவில்லை என்று யாரும் சொல்லமாட்டார்களா?"

சீனன் இதற்குப் பேசாமல் இருந்தான். "சரி; ஷங்கங் இருக்கிறானே, சாட்சி. அவனைக் கேட்போமே!" என்றான் பிறகு.

"அவன் பேச்சையும் யாரும் நம்பமாட்டார்கள். அவன் உங்க நண்பன். உங்களுக்காகவே பொய் சொல்லுகிறான் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?"

"அப்ப.. இதெல்லாம் நடந்தது பொய்யா? இவன் வேறு எதற்காக எங்களையே சுற்றிக்கொண்டு திரிகிறான்? இப்பொழுது இவனைச் சோதனை போட்டால் போதும். இவனிடம் என்னுடைய சு-சூ பெட்டி நிச்சயமாக அகப்பட்டு விடும்.."

பாரிஸ்டர் சிரித்தார்.

"நடந்ததெல்லாம் உண்மையாக இருக்கலாம், தம்பி! ஆனால் பிறர் இதை நம்ப வேண்டாமா! அதையும் தவிர, நேற்று இவன் பறங்கிமலைப் பங்களாவுக்கு வரவேயில்லை. எனக்குத் தெரியும். அப்படியே வந்திருந்தாலும் அவனுக்கும் அந்தப் பெட்டி காணாமல் போனதற்கும் சம்பந்தமே இல்லை என்பதும் எனக்குத் தெரியும். எப்படி என்கிறீர்களா? நேற்று இரவு முழுவதும், அதாவது இரவு பதினொரு மணியிலிருந்து அவன் இங்கேதான் இருக்கிறான். இங்கேயேதான் சாப்பிட்டான்; இங்கேயேதான் படுத்துக்கொண்டும் தூங்கினான். நான்கூட முதலில் பறங்கிமலைப் பங்களாவிலிருந்து போன் வந்ததும் சந்தேகப்பட்டேன். ஆனால் சற்றைக்கெல்லாம் இவனே இங்கு வந்துவிட்டான். அதற்குப் பிறகுதான் சந்தேகம் விலகியது" என்றார்.

சீனனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஒரு சமயம் இவரும்

அவனோடு சேர்ந்துகொண்டு சதி செய்கிருரோ என்று முதலில் அவனுக்கு ஒரு சந்தேகம் தட்டியது. ஆனல் மறு கணம், "சேசே! அப்படியெல்லாம் இருந்தால் என்னை இவர் முதலிலேயே மோசம் செய்திருக்கலாமே!" என்று அந்தச் சந்தேகம் விலகிவிட்டது. மேலும் பாரிஸ்டர் முகத்தைப் பார்த்தாலே இந்தப் பழியெல்லாம் வீண் அபாண்டம் என்பது தெரிந்துவிடும். தெரியாமலா 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்கிருர்கள்! ஆனல் இரவு அந்தக் கிங்கிங்கை அவன் கண் கூடாகப் பார்த்திருக்கிருனே! பின்னல் ஒரு டாக்ஸியில் துரத்திக்கொண்டு வந்திருக்கிருனே! அது பொய்யா, பாரிஸ்டர் சொல்வது பொய்யா?

தான்தான் ஒரு சமயம் வேறு யாரையோ பார்த்துவிட்டு, கிங்கிங் என்று எண்ணிவிட்டோமோ: அப்படியானல் ஒரு வண்டி பங்களாவின் மதிலுக்குப் பக்கத்தில் நின்றதே, அது ஏது? ஓர் ஆள் சாக்கடைக் குழாயைப் பிடித்துக்கொண்டு ஏறினனே, அவன் யார்? பாதையில் மரம் வெட்டிக் கிடந்ததே, அது எதனல்? டெலிபோனில் யாரோ மிரட்டினனே, அவன் எங்கிருந்து மிரட்டினன்?

சீனனுக்கு மூளையே குழம்பி விடும்போல் இருந்தது.

பாரிஸ்டர் இன்ஸ்பெக்டர் துரைசிங்கத்துக்கு வேண்டிய யோசனைகளைச் சொல்ல வெளியில் வந்தார். சீனனும் வெளியில் வந்தான். "எப்படியும் இந்தத் திருட்டை நான் கண்டு பிடிக்காமல் போகமாட்டேன்" என்று வீரம் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டார் துரைசிங்கம்.

அன்று இரவு சீனனும் ஷங்கங்கும் முன்பே பேசிக்கொண்டபடி தனியே பிரிந்துவிட்டார்கள். சீனனுக்குச் சைனீஸ் ஹோட்டலுக்குத் தனியாகச் செல்லப் பயமாகத்தான் இருந்தது. ஆயினும் அவன் தைரியத்தோடு தனக்கு நேரும் எதிர்ப்புக்களைச் சமாளிப்பது என்று துணிந்துவிட்டான். துணிந்தவன்தான் வாழ்க்கை வாழ முடியும். பயந்தவன் வாழ்வது வாழ்க்கையேயில்லை என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. அன்று முழுவதும் அவன் தனியாகவே பல இடங்களுக்குப் போனன்: பல காரியங்களைச் செய்தான். அவசரமாக இருந்தால் பாரிஸ்டரிடம் போகலாம் என்கிற எண்ணத்தோடு அவன் சாப்பாட்டையெல்லாம் வெளியில் முடித்துக்கொண்டு, தன் காரில் ஹோட்டலுக்குத் திரும்பி வந்தான்.

ஹோட்டலில் மாறுதல் எதுவும் இல்லை. எல்லா மரியாதைகளும் வழக்கம்போலத்தான் நடைபெற்றன. கிங்கிங் இருந்த எதிர் அறை பூட்டப்பட்டுக் கிடந்தது.

"சாபர்! நீ எல்லாவற்றிற்கும் நம் அறையின் வாசலில் படுத்திரு! கூப்பிட்டால் ஏனென்று வந்து கேட்கலாம்!" என்று எச்சரித்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

அங்கும் எல்லாம் வைத்தது வைத்தபடியேதான் இருந்தன. அவன் இல்லாதபோது யாரும் வந்து திருட்டுத்தனமாக ஆராய்ந்திருப்பார்களோ என்று அவன் கவனமாகப் பார்த்தான். ஒன்றும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

கதவுகளை இறுகத் தாளிட்டுக்கொண்டு, கிழவரின் கைத்துப்பாக்கியை எடுத்துத் தற்காப்புக்காக வைத்துக்கொள்ள எண்ணிப் பிரோவைத் திறந்தான்.

அப்படியே அவன் மூச்சு நின்றுவிடும் போல் இருந்தது. முன்பு கிழவர் மூர்ச்சையாகி விழுந்ததற்குக் காரணமாக இருந்த மண்டையோடு அங்கே மேலே காணப்பட்டது.

சிலைபோல் அதையே பார்த்துக்கொண்டு நின்ற சீனன், அதற்கு மேல் மிரளவில்லை. நடப்பது நடக்கட்டும் என்கிற துணிவோடு டிராயரைத் திறந்து கைத்துப்பாக்கியை எடுத்துவைத்துக் கொண்டான்.

அந்த மண்டை ஓட்டை என்ன செய்வது? அது எப்படி இங்கே யாரும் இல்லாதபோது வந்தது? சீனன் அதுபற்றியே யோசித்துக்கொண்டு நின்ருன். (தொடரும்)

சாவிலே வாழ்வு

சம்பந்தம்

எவ்விதம் கிருஷ்ண தேவராயரின் தலையைக் கொண்டு போவதென்று தீர்மானித்து, கோல்கொண்டா நாட்டிலிருந்து ஒற்றன் ஒருவன் வந்திருந்தான். அரசனிடம் நெருங்கிப் பழகுபவன் தெனாலிராமன்தான் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே! அதனால் ஒரு தெலுங்குப் பிராம்மணன் போல் நடித்துக் கொண்டு, தெனாலிராமனின் மாமன் வழியில் தூர உறவு என்று அவன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து சேர்ந்தான் அந்த ஒற்றன்.

அந்த மாதிரி உறவு தனக்கு யாரும் இல்லையே என்று சற்றுச் சந்தேகந்தான் தெனாலிராமனுக்கு. மேலும் கீழும் பார்த்தான். ஆனால் அதற்குள் அந்த ஒற்றன் வாய்ச் சாலக்காக ஏதோ முறையைச் சொல்லி உறவைக் காட்டவே, பிரியமாய் வரவேற்று வைத்தான். தினம் அவன் வீட்டில் உண்டு, உறங்கி, ஊர் சுற்றிக்

''என்ன? பாகவதர்வாள்! கட்டட நிதிக்குக் கச்சேரி செஞ்சிங்களே! என்ன, வந்தது?''

''கட்டடத்துக்கு வேண்டிய கல் வந்துடுத்து!''

கொண்டு வந்தான் அந்த ஒற்றன்.

ஒரு நாள் தெனாலிராமன் எங்கேயோ வெளியே சென்றிருந்தான். அவன் வீட்டிலிருந்த மற்றவர்களும் பக்கத்து ஊரில் நடந்த திருவிழா பார்க்கச் சென்றிருந்தார்கள். அதுதான் சமயமென்றறிந்து வீட்டில் தனியாயிருந்த அந்த ஒற்றன், ''உடனே இங்கு வந்தால் வாழ்க்கையில் இதுவரை கண்டிராத அதிநூதன அற்புத நிகழ்ச்சி ஒன்றைக் காணலாம்'' என்று தெனாலிராமன் எழுதுவது போலவே ஓலையொன்று எழுதி, ஓர் ஆள் மூலம் அரசனுக்கு அனுப்பி வைத்தான். அதைக் கண்ட அரசனும், அதை உண்மையென நம்பி, குதிரை மீதேறி உடனே வந்து சேர்ந்தான்.

வீட்டினுள்ளே அரசன் நுழைந்தது தான் தாமதம். தயாராக இருந்த அந்த ஒற்றன் கத்தியை உருவிக்கொண்டு அரசன் மீது பாய வந்தான். ஆனால் அரசனே வெறுங் கையுடனிருந்தும், அவன் மீது பாய்ந்து அவன் கையைப் பிடித்து முறுக்கி, கத்தியைக் கீழே போடும்படிச் செய்தான். அதற்குள் சத்தம் கேட்டு, தெருவில் சென்ற ஜனங்களெள்ளாம் உள்ளே நுழைந்து விட்டார்கள். பிறகு கேட்க வேண்டுமா! அந்த ஒற்றன் அதே இடத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கும் அனுப்பப்பட்டான்.

அரசாங்கத்துச் சட்டப்படி எவனொருவன் வெளிநாட்டு ஒற்றனுக்கு இடம் கொடுக்கிறானோ அல்லது உணவிட்டுப் போஷிக்கிறானோ, அவனுக்கும் கொலைத் தண்டனை அளிக்க வேண்டும். அதற்கு இப்பொழுது தெனாலிராமனல்லவா மாட்டிக்கொண்டு விட்டான்!

தன்னை மன்னிக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் தெனாலிராமன்.

''சட்டத்தை மாற்றி உன்னை மன்னிப்பதென்பது சாத்தியமில்லை, தெனாலிராமா. ஆனால் உனக்கு எது மாதிரிச் சாவு வேண்டுமென்று சொல். அப்படியே நிறைவேற்றச் சொல்கிறேன்'' என்றான் அரசன்.

சற்று யோசித்தான் தெனாலிராமன். உடனே அவன் முகம் பளிச்சிட்டது. ''நான் கிழவனான பிறகுதான் சாகவேண்டும். அது மாதிரி சாவுதான் எனக்குப் பிடிக்கிறது'' என்றான் வெடுக்கென்று.

''அட போக்கிரி! தப்பித்துக் கொண்டு விட்டாயே!'' என்று சொல்லி அரசன் விழுந்து விழுந்து சிரித்தான். ''நீங்களோ சிரிக்கிறீர்கள்! ஆனால் நானும் அவனை வெளிநாட்டு ஒற்றன் என்று அப்பொழுதுதான் தீர்மானித்தேன். உடனே வேண்டுமென்றே அவனை வீட்டில் தனிமையாக்கி உங்களிடம் ஓடி வந்தேன். வாளைக் கொண்டு போய் அவன் தலையை நானே சீவுவதற்கல்லவா இருந்தேன்! ஆனால் அதற்குள் அவன் முந்திக் கொண்டு விட்டான். கடைசியில் அவனைக் கொல்வதில் நீங்களும் முந்திக்கொண்டு விட்டீர்கள். இப்போது அவனை என்னால் கொல்ல முடியாமல் போய் விட்டதே என்று எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது'' என்றான்.

எனக்கு ஒன்றும் தெரியாது

தே. பார்த்தசாரதி

எங்கள் காலனியான 'படேல் நக'ருக்குத் தலைவிபோல் இருப்பவள் குப்புப் பாட்டிதான். அவளுக்கு 'இன்பர்மேஷன் பீரோ' என்ற ஒரு காரணப் பெயரும் உண்டு. ஊர் வம்பு அளப்பதில் அவளை மிஞ்ச யாராலும் முடியாது. எந்தக் குடும்பமானாலும் சரி, எவ்வளவு பெரிய பணக்கார இடமாக இருந்தாலும் சரி—ஒன்றும் அவள் வம்புக்குத் தப்பினது கிடையாது. 'படேல் நக'ரில் அவ்வப்போது நடக்கும் ரசமான செய்திகளைச் 'சுடச்சுட' வெளிப்படுத்தும் ஒரு தினசரிப் பத்திரிகையாக விளங்குபவள் அவள். அவளுக்குத் தெரியாமல் எங்கள் காலனியில் ஒரு சிறு விஷயம்கூட நடக்க முடியாது. அப்படி வம்பளத்தல் என்பது குப்புப் பாட்டியின் கூடவே பிறந்தது!

அன்றொரு நாள் எனக்குப் பொழுது போகாமல் 'டல்'லாக இருந்தது. குப்புப் பாட்டியிடம் போய்க் கொஞ்சம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்தால் பொழுது போகும் என்று நினைத்து, உடனே அவள் வீட்டுக்குப் போனேன். நான் போகும்போது குப்புப்பாட்டி 'கிட்ச'னில் உட்கார்ந்துகொண்டு, அப்பளத்து மாவு உருண்டைகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, அப்பளம் இட்டுக்கொண்டிருந்தாள். ''யாரது, பிச்சுமணியா? வாடாப்பா, வா!'' என்று என்னை வரவேற்றாள்.

''ஆமாம், பாட்டி. எனக்கு ஒரு சந்தேகம். அதைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணித்தான் உன்னிடம் வந்திருக்கிறேன்'' என்று பீடிகை போட்டேன்.

''என்னடா அது?'' என்று அப்பளத்தை இட்டுக்கொண்டே கேட்டாள் குப்புப் பாட்டி.

''நம்ப காலனியிலே இரண்டு நாளுக்கு முன்னாலே பத்தாம் நம்பர் பங்களாவுக்கு யாரோ புதிதாகக் குடி வந்திருக்கிறார்களே; அவர்கள் யாரென்று உனக்குத் தெரியுமா, பாட்டி?'' என்று கேட்டேன்.

''அவர்களைப்பற்றியா கேட்கிறாய்? அவர்களைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது!'' என்றாள் குப்புப் பாட்டி.

நான் வியப்புடன், ''அது என்ன பாட்டி, அப்படிச் சொல்கிறாய்? அவர்கள் வந்து இரண்டு நாள் ஆகிவிட்டது; இன்னும் அவர்களைப் பற்றி ஒன்றும் தெரிந்து வைத்துக் கொள்ளாமல் இருக்கிறாயே!'' என்றேன்.

குப்புப் பாட்டி மோவாய்க் கட்டையைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு, ''அந்த ராங்கிக்காரியோடு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது! ஏதாவது கேட்டால் பதில் சொன்னால்தானே?...

அடியம்மா, என்ன ராங்கி, என்ன ராங்கி!'' என்ருள்.

''அது ஏன் பாட்டி? அவள் அவ்வளவு ராங்கிக்காரியா, என்ன?''

''ஆமாம்டா. அவள் பிள்ளை பெரிய இஞ்சினீயராக இருந்தால் எனக்கென்ன வந்ததாம்?''

''அவள் பிள்ளை இஞ்சினீயரா, பாட்டி?''

''எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாதுடா...ஆனு, நான் கேட்கிறேன்; இவர்கள் ஐந்து வருஷம் பட்டணத்திலே இருந்தவர்களானுல் இவர்களுக்குக் கொம்பு முளைத்து விடுமா?''

''இவர்கள் இதற்கு முன்னுல் பட்டணத்திலேயா பாட்டி இருந்தார்கள்?''

''அட, நான் என்னத்தையடா கண்டேன்!.....ஆனுலும் அந்த வீட்டுக்காரர் அப்படித் தன் பெண்டாட்டியைக் கண்டு நடுங்க வேண்டாம்.''

''யாரைச் சொல்கிருய், பாட்டி?''

''எல்லாம் அந்த ராங்கிக்காரியின் அகமுடையானைத்தான் சொல்கிறேன். அவன் இப்படி பெண்டாட்டி தாசனுக இருப்பதினுலே தான், அவன் இஷ்டப்படி ஒன்றும் நடப்பதில்லை!''

கல்யாண வீட்டில்!



கல்யாண வீட்டு வாசலில் ஆண்களின் செருப்புகள் ஒருபுறமும் பெண்களின் செருப்புகள் மறுபுறமும் கலந்து கிடந்தன. அவர்கள் பெயர்கள் எல்லாம் இரண்டே எழுத்துக்கள் கொண்டவை. செருப்பிலுள்ள எழுத்தைக் கொண்டு யார் யார் வந்திருக்கிருர்கள் என்று பாருங்கள்.

விடை: 24 - ஆவது பக்கம்.

‘‘அது ஏன் பாட்டி, அப்படிச் சொல்கிறாய்?’’

‘‘இதெல்லாம் யாருக்குடா தெரியும்?..அதுதான் எனக்கு ஒன்றும் தெரியாது என்கிறேனே.....ஆனா பாரு, அவருக்குத் தம் பெண்ணுக்கு இந்தத் தையிலேயே கல்யாணத்தை முடிச்சுடணும்னு ஒரே ஆசை. ஆனா ஆசைப்பட்டு என்ன பிரயோஜனம்? அந்த ராங்கிக்காரியோ தன் பெண்ணை இன்னும் மேலே மேலே காலேஜிலேயெல்லாம் படிக்க வைக்கணும்னு ஒற்றைக் காலிலே நிக்கறா!....’’

‘‘இன்னொரு கால் ஊனமா, பாட்டி?’’

‘‘எனக்குத்தான் அவர்கள் குடும்பத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது; அவர்கள் என் வீட்டிற்கு வரவுமில்லை; நான் அவர்கள் வீட்டுக்குப் போகவுமில்லை என்று சொல்கிறேனே. அதைக் காதிலே வாங்கிக் கொள்ளாமல் மேலே மேலே கேட்கிறாயே!....அந்த ராங்கிக்காரிக்கு ஆனாலும் அவ்வளவு ஆசை வேண்டாம்!’’

‘‘அது என்ன ஆசை, பாட்டி?’’

‘‘அது என்ன ஆசையோ, யார் கண்டா?....அவளுக்கு அண்ணா பிள்ளை ஒருத்தன் பட்டணத்திலே இருக்கிறான். அவன் காலிலே தன் பெண்ணைக் கட்டிவிடணும் என்ற எண்ணம்தான். ஆனால் அந்தப் பெண்ணுக்கு அந்தப் பையனைப் பிடித்தால்தானே?’’

‘‘ஏன் பாட்டி அந்தப் பெண்ணுக்கு அந்தப் பையனைப் பிடிக்கவில்லை?’’

‘‘அந்த விவரமெல்லாம்தான் எனக்கு ஒன்றும் தெரியாது என்கிறேனே, அப்புறமும் நோண்டி நோண்டிக் கேட்கிறாயே!....அசல் மண்டூகத்தைக் கல்யாணம் செய்துகொள்ள எந்தப் பெண்ணுக்குத்தான் பிடிக்கும்?’’

‘‘அந்தப் பையன் அப்பேர்ப்பட்ட மண்டூகமா, பாட்டி?’’

‘‘அவனுந்தான் மெடிகல் காலேஜில் படிக்கிறான், படிக்கிறான், அத்தனை வருஷமா படிக்கிறான். புத்திசாலியாக இருந்தால் சீக்கிரமே பாஸ் செய்துவிட்டுப் பிராக்டீஸை ஆரம்பிக்க வேண்டுமோ, இல்லையோ?...’’

‘‘ஆமாம், பாட்டி!....அப்படியானால் அந்தப் பெண் அவனைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறதா, பாட்டி?’’

‘‘இந்தச் சனியனையெல்லாம் தெரிஞ்சுக்க யாருக்குடா அக்கறை இருக்கு?..அவள்தான் நான் எது கேட்டாலும் பதில் சொல்வதில்லையே!....தன் பெண்ணுக்குத்தான் ரேடியோவிலே பாடத் தெரியும் என்ற அகங்காரம் அவளுக்கு!...’’

‘‘அவள் பெண் ரேடியோவிலே வேறு பாடுகிறாளா?’’

‘‘என்னைக் கேட்டால் நான் என்னத்தையடா கண்டேன்!..மாசத்துக்கு ஒரு தடவை ரேடியோவிலே பாட, ‘சான்ஸ்’ வருகிறதாம். அந்தப் பெருமை அவளோட!....டம்பமா ஒரு பையைத் தூக்கிண்டு சதா ‘லேடீஸ் கிளப்’புக்குப் போய்த் தன் பெருமையை டமாரம்

211804



நிலவுக்கடல்



A. அனந்தகிருஷ்ணன்
(வயது 13)
சென்னை-13.
சித்திரப் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற படம்

அடிக்கத்தானே அவளுக்குப் பொழுது சரியாக இருக்கிறது?.. ஏதுடா, மாமியார்க்காரி கிடையாய்க் கிடக்கிறாளே, அவளைக் கவனிப்போம் என்றிருக்கிறதா?''

''யாருடைய மாமியார்க்காரி பாட்டி?''

''எல்லாம் அந்த ராங்கிக்காரியின் மாமியார்க்காரிதான். அவளோ சாகக் கிடக்கிறாள்! இவள் அவளைக் கொஞ்சமாவது லட்சியம் பண்ணினுத்தானே?..உம், காலம் மாறிப் போச்சு! மாமியார்களைக் கண்டு எந்த மாட்டுப் பெண்தான் இந்தக் காலத்தில் பயப்படுகிறேன் என்கிறாள்?...''

''ஏன் பாட்டி, அப்படிச் சொல்கிறாய்?''

''அட போடா. நானும் அரை மணியா திருப்பித் திருப்பி எனக்கு ஒன்றும் தெரியாது என்கிறேன். மறுபடி மறுபடி நோண்டி நோண்டிக் கேட்கிறாயே!....''

''அப்படியானால் அவர்களைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாதா?''

''ஒன்றும் தெரியாது...அட தடியா, இது என்னடா இங்கே வைத்திருந்த பன்னிரண்டு அப்பளத்துமா உருண்டையில் பத்துதான் இருக்கு! பாக்கி எங்கேடா?....''

''என்னைக் கேட்டால் நான் என்னத்தைக் கண்டேன், பாட்டி?''

''அடப்பாவி, உருண்டையை வாயில் அடக்கி வைத்துக்கொண்டே ஒன்றும் தெரியாது என்கிறாயே!...கேள்வி கேட்டுக் கொண்டே நடுவில், நடுவில் அதை வேறு சாப்பிட்டு விட்டாயா? நானும் பேச்சுச் சுவாரஸ்யத்தில் கவனிக்காமல் இருந்துவிட்டேன்!'' என்று சொல்லிக்கொண்டே குப்புப் பாட்டி அப்பளக் குழவியினால் ஓங்கி ஒரு போடு போட வந்தாள். அந்த அடி விழும் வரையில் அங்கே என் மண்டையைக் காட்டிக்கொண்டிருக்க எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?..

தீபாவளி போனஸ்

கே. எஸ். பி.

பொழுது புலர்ந்தால் தீபாவளி. எழுத்தாளர் ‘ஜிம்மி’யிடம் சல்லிக் காசு என்றால் சல்லிக் காசு கிடையாது.

ஒரு மாதத்துக்கு முன்னாலேயே பால்காரன், ‘‘சாமீ! தீபாவளி இனாம் கொடுக்கத் தவறி விடாதீங்க!’’ என்று அடி போட்டான்.

தபால்காரச் சுப்பிரமணியம் ‘‘ஸார், சென்ற பொங்கலுக்குக் கூட ‘டிமிக்கி’ கொடுத்திட்டீங்க; தீபாவளிக்கு ரெண்டு ரூபாயா கொடுத்திடணும்’’ என்றான்.

இவ்வளவும் போதாதென்று அவர் மனைவி பங்கஜம், ‘‘போன வருஷம்கூட நம் வீட்டிலே தீபாவளி இல்லை; இந்த வருஷமாவது விமரிசையாகக் கொண்டாட வேணும். எல்லாம் முன்னதாகவே வாங்கிக் கொடுத்தால்தான் பண்டிகை கொண்டாட முடியும்!’’ என்று ஒரு வார நோட்டீஸ் கொடுத்துவிட்டாள்.

ஐந்து வயதுச் சிறுவன் பாலு, ‘‘அப்பா, எனக்கு ஒரு சில்க் சட்டையும் நல்ல நிஜாரும் வாங்கித் தரணும்!’’ என்ற பல்லவியை விடாமல் பாடிக்கொண்டிருந்தான்.

மூத்த பெண் கமலா சற்றுக் கெட்டிக்காரி: ‘‘எல்லாம் அப்பாவுக்குத் தெரியும்டா பாலு; இந்த வருஷம் பத்து ரூபாய்க்குப் பட்டாசுவாங்கப் போறா நம்ம வீட்டில்..!’’ என்று அவள் ஜம்பமடித்துக்கொண்டாள்.

* * *

இவ்வளவு தொல்லைகளையும் எங்ஙனம் சகிப்பார், மிஸ்டர் ஜம்பு



நாதன்! அவர் ஒரு சின்னப் பத்திரிகையின் ஆசிரியர். ஏற்கனவே 'மலர் வேலை, மலர் வேலை!' என்று ஆபீசில் அவரைப் பிழிந்து விட்டனர். ஒரு வழியாகத் தீபாவளி மலர் தயாராகிவிட்டது.

தீபாவளிப் போனஸை எதிர்பார்த்து அவர் கண்கள் பூத்து விட்டன. வருஷா வருஷம் ஒரு தகராறும் இல்லாமல் போனஸ் கிடைத்துவிடும். இந்த வருஷம் பலத்த சச்சரவு வேறு.

''போனஸ் பணம் கொடுக்கவின்னு ஆபீஸில் ஸ்டிரைக் நடைபெறும்!'' என்று தொழிலாளர்கள் அறிக்கை விட்டிருந்தனர். முதலாளி எதற்கும் மசிவதாக இல்லை. அவர் கண்டிப்பாக, ''இவ் வருஷம் வியாபாரத்தில் லாபமே கிடையாது; பெருத்த நஷ்டம்! போனஸ் அடுத்த வருஷம் கிடைத்தாலே அதிருஷ்டந்தான்..!'' என்று சொல்லிவிட்டார். இதைக் கேட்டதும் 'ஜிம்மி'க்கு அடி வயிற்றைக் கலக்கியது.

ஒரு யோசனையும் தோன்றாமல் அவர் இரண்டு நாட்கள் முன்னதாக மானேஜர் வீட்டுக்குப் போய்ப் பால்காரன் தொல்லை, குழந்தைகளின் ரகளை, மனைவியின் கடுகடுப்பு, தபால்காரனின் முறுமுறுப்பு—அனைத்தையும் பூர்வாங்கமாக எடுத்துக் கூறிவிட்டு, ''போனஸ் இல்லாவிட்டால் போகிறது. ஒரு நூறு ரூபாயாவது கடனாகக் கொடுங்கள்; மாத மாதம் பத்து ரூபாய் சம்பளத்தில் கழித்துக் கொள்ளலாம்!'' என்று வேண்டினார்.

ஆனால் மானேஜர் அமைதியாக, ''முதலாளி ஊரிலில்லை; நானும் போனஸ் பணத்தைத்தான் எதிர் பார்த்தேன். அவர் டில்லியிலிருந்து திரும்பி வந்தாலாவது நாமிருவரும் கடனாவது வாங்கிக் கொள்ளலாம். கேட்காமல் கொள்ளாமல் நான் இன்று பணத்தை எடுத்து உங்களுக்குக் கொடுத்து விட்டால் நாளைக்கு அவர் திட்ட மாட்டாரா?'' என்று கையை விரித்தார்.

எவ்வழியிலும் பணம் கிடைக்காமல் சோர்வுடன் வீடு திரும்பினார் ஜம்புநாதன். பொழுது விடிந்தால் தீபாவளி; வெளியிலே பட்டாசு வெடிக்கும் ஓசை காதைப் பிளந்தது. கடைசி நிமிஷத்தில் கடன் கொடுத்து உதவுவதற்குக்கூட யாரும் இல்லை.

எங்கே தாம் சொன்னதை மறந்துவிடப் போகிறாரோ என்று பங்கஜம் மீண்டும், ''என்ன, சாமான் வாங்கப் பணம் கிடைக்கலியா?'' என்று அடி போட்டாள்.

''எல்லாம் மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்; சாயங்காலத்திற்குள் அரேஞ் செய்கிறேன்!''

மனைவி கொடுத்த காபியை அருந்திவிட்டு, ஈஸிசேரில் சாய்ந்தார் 'ஜிம்மி!'. பாவம், அவருக்கு நல்ல களைப்பு!

2

''ஸார், தபால்!'' கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்தார் ஜிம்மி.

அன்பார்ந்த ஜிம்மி அவர்களுக்கு,

வணக்கம். எங்கள் சிறுவர் வாரப் பத்திரிகையில் தங்கள் தொடர்கதை ஒன்று இருபது வாரங்களுக்குத் தொடர்ந்து வெளிவர வேண்டும். தங்களைப் போன்ற எழுத்தாளர்களின் அன்பும் ஆதரவும் எங்களுக்கு என்றும் தேவை.

'வானரம், ஆசிரியர்: 'பூமாலை.'

* * *

அன்பு மிக்க வானரத்துக்கு—

தங்கள் நன்றிக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். எங்களைப் போன்ற ஏழை எழுத்தாளர்களைத் தூண்டி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தாங்கள் எடுத்துக்கொண் டிருக்கும் முயற்சிக்கு நன்றி. தொடர் கதையை விரைவில் அனுப்புகிறேன்!

ஜிம்மி.

* * *

ஜிம்மி அவர்களுக்கு—

நன்றி. தங்களைப்போன்ற அநுபவ எழுத்தாளர்கள்தான் தற்காலப் பத்திரிகை உலகை ஆளுபவர்கள். வரும் இதழிலேயே தங்கள் கதையைத் தொடங்க நினைக்கிறோம்!

* * *

அன்புடையீர்,
தங்கள் கடிதம் ஒவ்வொன்றும் என்னை இன்பக் கடலில் ஆழ்த்து கிறது.
'மாஸ்டர் சேகர்' என்ற என் சிறுவர் நாவலை இத்துடன் அனுப்பி யுள்ளேன்—ஜிம்மி.

*   *   *

ஐயா—
வணக்கம். நாவல் கிடைத்தது, படித்து மகிழ்ந்தோம். என்ன அபாரமான கதை! அற்புதமான 'பிளாட்!' எத்தனை திடுக்கிடும் சம்பவங்கள்! ரசமான கட்டங்கள்! ஆராய்ச்சியைக் கிளறி மூளையைக் குழப்பும் விஷயங்கள்!
தங்கள்
'வானரம்.'

*   *   *

அன்புடையீர்,
தங்கள் இதழை விரைவில் எதிர் பார்க்கிறேன்—ஜிம்மி.

*   *   *

ஐயா,
இதழ் வருகிறது. முதல் பக்கத்தி லேயே தங்கள் கதை ஜாம் ஜாம் என்று தொடங்குகிறது. எங்கள் புகழ்பெற்ற ஓவியர் அதற்கு 'டிரை கலர்' படம் வரைந்துள்ளார்!

*   *   *

அன்புடையீர்,
தங்கள் இதழின் அட்டைப்படம் கண்ணைக் கவருகிறது. தங்கள் ஓவியர் என் நாவலுக்கு வரைந் திருக்கும் படம் வெகு ஜோர்.
ஜிம்மி.

*   *   *

ஜிம்மிக்கு,
கதை இதுவரையில் பதினைந்து வாரங்களுக்கு வந்திருக்கிறது. தினமும் நூற்றுக்கணக்கான வாச கர்களிடமிருந்து பாரட்டுக் கடிதங் கள் வந்து குவிந்த வண்ண மிருக் கின்றன. மற்றொரு நல்ல செய்தி! தங்கள் நாவலின் சிறப்புக் காரண மாக எங்கள் பத்திரிகையின் விற் பனை அபாரமாகப் பெருகியிருக் கிறது.''

*   *   *

ஐயா,
தங்கள் கடிதம் பார்க்க மிக்க மகிழ்ச்சி; தீபாவளிக்கு வீட்டில் பல செலவுகள் இருப்பதால் சம்மானத் தொகையில் ரூபாய் நூறு அனுப்பி உதவ வேண்டுகிறேன். ஜிம்மி!

*   *   *

அன்புடையீர்,
கதை இன்னும் மூன்றே இதழ் களில் முடிந்துவிடும். பிறகு ஒரே செக்காக ரூபாய் முந்நூறுக்கு வாங்கிக்கொள்ளுங்களேன்! எங்க ளுக்கும் அதுதான் சௌகரியமாக இருக்கும்.

*   *   *

ஐயா,
நாவல் முடிவது இருக்கட்டும்; இங்கே தீபாவளிக்குக் காலணு இல்லாமல்....! அதிகம் எழுதத் தேவையில்லை என எண்ணுகிறேன். உடனே சிறு தொகை அனுப்பினுல் நல்லது.

*   *   *

ஐயா,
என்ன ஆச்சரியம்! நேற்று எங் கள் காரியாலத்துக்கு ஒரு கடிதம்

வந்தது. தங்கள் நாவல் திருட்டுச் சொத்து என்று அறிந்து மிகவும் வருந்துகிறோம். முன்பு அன்பர் பாவாடை 'பட்டாம்பூச்சி' யில் இதேபோல ஒரு நாவல் எழுதியிருக்கிறாராம். இம்மாதிரிச் செயல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். திருட்டுச் சொத்து என்று அறிந்து, காலணுக்கூட நாவலுக்கு அனுப்பக்கூடாது என்று காரியாலயத்தினர் முடிவு செய்துவிட்டனர். தங்கள் செயலுக்கு மிகவும் வருந்துகிறேன்;

3

''அட ராமா!''

ஈஸிசேரிலிருந்து பொத்தென்று கீழே விழுந்தார் ஜம்புநாதன்; நல்ல வேளை, காயம் ஒன்றும் படவில்லை. திடுக்கிட்டு எழுந்ததும்தான் இது வரை கண்டது எல்லாம் கனவு என்று அவருக்குத் தெரிந்தது.

பங்கஜம் ஓடோடியும் வந்து, ''ரொம்ப நன்னுயிருக்கே நீங்கள் குறட்டை விடுவது! ஆபீஸ் பியூன் அரை மணியா வாசலில் பணத்தை வச்சிண்டு காத்திண்டிருக்கான்!'' என்று பொரிந்து கொட்டினுள்.

அவிழ்ந்த வேஷ்டியைச் சரிப்படுத்திக்கொண்டு வாசலுக்கு ஓடினுர் ஜம்புநாதன். அங்கே அவருக்காகக் காத்திருந்த ஆபீஸ் பியூன் வேலாயுதம், ''என்ன ஸார், எந்நேரம் தூங்குவீங்க!'' என்றுன்.

''சரி, என்ன சேதி?''

''எல்லாம் நல்ல சேதிதான்! முதலாளி ஐயா திடீர்னு ஊர்லேருந்து திரும்பிவந்துட்டாரு; டில்லியிலே நம்ப கம்பெனி வியாபாரம் ரொம்ப ஜோராம். என்ன தோணிச்சோ தெரியலே, எல்லாருக்கும் போனஸ் கொடுக்க ஆர்டர் போட்டுட்டாரு! மானேஜர் ஐயா ரங்கசாமி,ஒங்க பணத்தை வூட்டுலே கொண்டு குடுக்கச் சொன்னுரு!'' என்று 'ஜிம்மி'யின் போனஸ் பணமான நூற்றுப் பதினன்கு ரூபாய் பதின்மூன்றணுவை அவரிடம் நீட்டினுன் வேலைக்காரன்.

அவருக்குச் சந்தோஷத்தில் பேச நா எழவில்லை. பின்னர் பெருமூச்சு விட்டு, ''நல்ல வேளை, சமயத்தில் போனஸ் பணம் வந்ததே! நம்ப முதலாளியே ரொம்ப நல்லவருடா, வேலு!'' என்று முதலாளியை ஒரு டிகிரி புகழ்ந்துவிட்டு, ''இந்தா, இந்தச் சில்லறை பதிமூணு அணுவை நீயே தீபாவளி இனமா வச்சுக்கோ!'' என்று அவனிடம் நீட்டிவிட்டு, பணத்துடன் உள்ளே நுழைந்தார் ஜம்புநாதன்.

4

''என்ன, போனஸ் கிடைத்ததா? சாமான்..!'' என்று ஆரம்பித்தாள் பங்கஜம்.

''அப்பா, சில்க் சொக்காய்..?''

''பட்டாசு அப்பா; ஆடம் பாம், விஷ்ணு சக்கரம் எல்லாம் வாங்கித் தறியா!'' என்று குழந்தைகள் ஒரு புறம்; மறுபுறம் வாசலில் பால்காரனும் தபால்காரனும் 'தேவுடு' காத்து நின்றனர்.

''சாமீ! சா..மீ..!''

''இதோ வந்துட்டேண்டா; கத்தாதீங்க!'' என்று கூறிவிட்டு, ஜம்புநாதன் மனைவியைக் கூப்பிட்டு,''இந்தா பங்கஜம்! போனஸ் பணத்தில் பத்து ரூபாய் கடைச் சாமானுக்கு, பால்காரன் தீபாவளி இனம் ரெண்டுரூபாய், பால் பாக்கிக்காக முப்பது ரூபாய், குழந்தைகள் துணி பத்து ரூபாய், என் வேஷ்டி, உன் புடவை முப்பது ரூபாய், தபால்காரன் இனம் மூணு ரூபாய்!'' என்று அப்பொழுது தான் வந்த பளபளக்கும் புது ரூபாய் நோட்டுக்களைப் பட்டுவாடா செய்யச் சொல்லிவிட்டு, ''அப்பாடா'' என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டபடியே, ஈஸிசேரில் சாய்ந்து தீபாவளியின் ஒளி வீசும் தெருவை நோக்கினுர்!

தாயும் சேயும்

ரா. ஆறுமுகம்

"உஷ்....அப்பப்பா. சே, சே. என்ன வெயில்...... முத்தம்மா, கொஞ்சம் நீராகாரம் இருந்தாக் கொண்டா. நாக்கை வறட்டுது'' என்று வியர்வையைத் துடைத்துக் கொண்டே உட்கார்ந்தான் வீரப்பன் திண்ணையில்.

''இவ்வளவு நேரமா எங்கே போய் அலைஞ்சிட்டு வர்றீங்க? உங்களுக்கு வைச்சிருந்த நீராகாரம் இந்தாங்க'' என்று ஒரு குவளையில் கொண்டு வந்து கொடுத்தாள் அவன் மனைவி.

அதை வாங்கி 'மடக் மடக்' என்று குடித்துவிட்டு, 'அப்பா' என்று பெருமூச்சு விட்டவாறு, ''நான் பக்கத்துக் கிராமத்துக்கு ஒரு அவசர வேலையா விடியக் கருக்கலிலேயே எழுந்து போயிட்டேன். அதனாலேதான் உன்னிடம் கூடச் சொல்லலை'' என்றான் வீரப்பன்.



''அப்படி என்ன அவசர ஜோலி யாம்!''

''ராத்திரி யெல்லாம் யோசித்துப் பார்த்தேன். நம்ம மருதமுத்து கடனுக்கு ரொம்ப நெருக்குருன். கண்ட இடத்திலே யெல்லாம் மடக்கிக் கேக்கருன். அதனுலே நம்ம பசுவை வித்துடுறதுன்னு தீர்மானம் பண்ணி அது விசயமாத்தான் போயிருந்தேன்.''

''என்ன, நம்ம பசுவையா? ஏன்?''

''பின்னே என்ன செய்யறது? பால் கறவையும் நின்னுட்டது. அடுத்த கன்னுப் போடும் வரை கட்டித் தீனி போடுறதுக்கு, இப்பவே வித்திட்டா கடனும் தீரும், செலவும் குறையும்.''

''இன்னும் நம்ம கன்னுக்குட்டி பாலே மறக்கலேயே. அதுக்குள்ளே வித்திட்டா, கன்றையும் சேத்தில்ல கொடுக்கணும்?''

''நான் என்ன பைத்தியக்காரனு? கன்னே நான் வைச்சுக்கிட்டு பசுவை மட்டும்தான் விலே பேசிட்டு வந்திருக்கேன். நூத்திஐம்பதுன்னு முடிவு பண்ணிட்டேன். இன்னும் ரெண்டு நாளிலே ஆள் வந்து பணத்தைக் கொடுத்திட்டு ஓட்டிட்டுப் போயிடு வாங்க.''

''சரி, உங்க இஷ்டம்போல் செய்யுங்க. கன்னுக்குட்டிக்குப் பாலுக்கு என்ன செய்யறது? அது ஏங்கிப் போகுமே?''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. தினம் வடிகஞ்சியை ஊட்டிக் காப்பாத்திடலாம். ஒரு வருஷம் போனு இதையும் நல்ல விலேக்கே தள்ளி விட்டிடலாம்.''

''ஒரு வழிக்கு உங்க யோசனேயும் சரிதான். அந்த மருதமுத்து கடன் நூறு ரூபாயும் போக பாக்கியை நம்ம வயல் விவசாயச் செலவுக்கு வைச்சுக்கலாம். அப்புறம் கையிலே காசு வந்தப்புறம் ஒரு பசுவா கிடைக்காமெப் போகும்?''

''என்ன முத்தம்மா, நான் அதையெல்லாம் நல்லா யோசிக்காமலா ஒரு முடிவு செய்வேன்? மேலும் நான் வாங்கின விலேக்கு மேலே பத்து ரூபாய் லாபத்துக்கேதான் பசுவைப் பேசியிருக்கேன்.''

''சரி, உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லப்போறேன்.. ம்..இப்ப என்ன சாப்பிடுறீங்க?''

''எனக்கு எதுவும் வேண்டாம். அங்கே போன இடத்திலே இட்டிலி, காபி யெல்லாம் கொடுத்தாங்க. இப்ப ஒண்ணும் தேவையில்லே. நான் இப்படியே வயல் பக்கம் போய் குப்பை யெல்லாம் ஒழுங்காகக் கொட்டி யிருக்கானுன்னு கவனிச்சிட்டு வர்றேன். மத்தியானம் வந்து சாப்பிட்டுக்கிறேன்'' என்று புறப்பட்டு விட்டான் வீரப்பன்.

இரண்டு நாட்கள் சென்று பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்த ஒருவர் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து, பசுவை ஓட்டிக்கொண்டு போய்விட்டார். பசு சென்ற மறு நாள் முதல் வீட்டில் நின்ற கன்றுக்கு வீரப்பன் கஞ்சி ஆகாரம் கொடுத்து வந்தான். இரண்டொரு நாட்கள்தான் அது சரியாகக் குடித்தது. அதற்கப்புறம் அதைக் குடிக்க மறுத்து 'அடம்' செய்ய ஆரம்பித்துவிட்டது கன்று. மனேவி முத்தம்மாள் அதற்குச் சங்கில் கஞ்சியை வார்த்து குழந்தைகளுக்குப் புகட்டுவது போலச் செய்தாள். அப்பா! ஓரிரண்டு நாட்கள் குடித்தது கன்று. ஆனுல் அதையும் மறுத்துவிட்டது. கஞ்சிக்குப் பதில் பாலேயே வாங்கி ஊற்றிப் பார்த்தார்கள். அதுவும் நடக்கவில்லே. நாளடைவில் கன்று இளேக்கத் தொடங்கியது. தண்ணீர் கூடச் சரியாய் அருந்துவதில்லே. எந்த நேரமும் ''அம்மே! அம்மே!'' என்று கத்திக்கொண்டு வீட்டின் பின்புறத் தோட்டத்தில் இங்கு மங்கும் சென்று பார்த்துவிட்டு, கட்டுத்தறியில் வந்து சோர்ந்து படுத்துக் கொண்டது. கண்களிலிருந்து நீர் வடிய ஆரம்பித்தது.

முத்தம்மாளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. தாய்ப்பசு இல்லாத ஏக்கம்தான் காரணம் என்று தன் கணவனிடம் சொன்னுள்.

''ஆரம்பத்தில் இப்படித்தானிருக்கும். அப்புறம் எல்லாம் சரியாகப்போகும். ஆகாரமில்லேன்னு கன்று ஒண்ணும் செத்துப் போகாது. சும்மா இரு'' என்று அவன் சமாதானப் படுத்திவிட்டான்.

வீரப்பனின் நெருங்கிய உறவினர் ஒருவர் நல்ல செல்வ வந்தர். ஆனால் அவருக்குக் குழந்தைகள் இல்லை. வீரப்பனின் ஒரு பெண்ணை அந்தச் செல்வ வந்தர் வளர்ப்பதாகச் சொல்லி ஒரு வருடத்திற்கு முன்பு தன் ஊருக்குக் கூட்டிப் போய்விட்டார். அங்கே அந்தப் பெண்ணை அவர் செல்வமாக வளர்த்து வந்தார். ஒரு நாள் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வீரப்பன் அதைப் படித்துவிட்டுக் கவலையடைந்தான்.

''முத்தம்மா, நம்ம குழந்தை அன்னத்துக்கு ஒரு வாரமாக் காய்ச்சலாம். கண்ணைக்கூட முழிக்காமல் படுத்திருக்காம். எந்நேரமும் உன் நினைப்பா 'அம்மா, அம்மா'ன்னு புலம்புதாம். உன்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருக்காங்க. என்ன சொல்றே?'' என்று கேட்டான்.

அதைக் கேட்ட அவள் திகிலடைந்து, ''எனக்கு அப்பவே தெரியும். நாம் என்னதான் கஷ்டப்பட்டாலும், கஞ்சியைக் குடிச்சாலும், நம்ம பிள்ளை நம்மிடத்திலேதான் இருக்கணும். வெளியார் என்னதான் பாலும் பழமும் ஊட்டி வளர்த்தாலும் அதுக ஏங்கித்தான் போகுமின்னு அப்போதே சொன்னேன். நீங்கள்தான் என் பேச்சைக் கேக்கலையே'' என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

''ஒரு குழந்தையாவது சௌக்யமா வளரட்டுமேன்னு நினைச்சுத்தான் அனுப்பினேன். இப்படியாகுமின்னு எனக்கென்ன தெரியும்?''

''சரி, இனி யோசிக்க என்ன இருக்கு. என்னை ரெயில் ஏத்தி விடுங்க. நான் போய் நேரிலே பார்த்திட்டு வர்றேன்'' என்று அந்த ஊருக்குப் புறப்பட ஆயத்தமானாள் முத்தம்மாள்.

ரெயில் ஏற்றிவிட்டு வந்து கவலையோடு உட்கார்ந்தான் வீரப்பன். கட்டுத் தறியில் எலும்பும் தோலுமாகப் படுத்திருந்த கன்றுக்குட்டி ஈனக்குரலில், 'அம்மே! அம்மே!' என்று கதறியது அவன் காதில் விழுந்தது. தன் சொந்தப் புதல்வியின் நிலையையும் கன்றின் நிலையையும் ஒத்திட்டுப் பார்த்தான். ஒரு பக்கம் தாய்ப் பசுவைப் பிரிந்த

கன்று; இன்னொரு பக்கம் தாயைப் பிரிந்த தன் மகள். இரண்டிற்கும் காரணம் தானேயென்று தன்னையே நொந்து கொண்டான். அதற்கு என்ன செய்வதென்று யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டான். பசுவைத் திரும்ப ஓட்டி வரவேண்டுமென்றால் நூற்று ஐம்பது ரூபாய் வேண்டும். பணம் கொடுத்தாலும் அதை வாங்கியவன் திருப்பிக் கொடுப்பானா என்பதும் சந்தேகம். தன் மகளைத் திரும்பக் கூட்டி வந்துவிட்டால் அவன் எதிர்பார்த்த செல்வம் தன் மகளுக்குக் கிடைக்காமல் போய் விடும். ஒன்றும் செய்யத் தெரியாமல் திண்டாடினான் வீரப்பன்.

அலறியடித்துக் கொண்டு சென்ற முத்தம்மாள் தன் மகள் அன்னத்தைக்கண்டு வாரியெடுத்து மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சினாள். கண்களைத் திறவாமல் புலம்பிக் கொண்டிருந்த சிறுமி தாயின் குரலைக் கேட்டதும், ''அம்மா!'' என்று ஆனந்தக் கூச்சலிட்டு அவளைக் கட்டி யணைத்துக் கொண்டு அவள் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் பெருக்கினாள். அவள் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து அழுத்திக் கொண்டாள். தாயின் பாசத்தையும் குழந்தையின் ஏக்கத்தையும் கவனித்த செல்வ வந்தர், தன் தவற்றை உணர்ந்து விட்டார். வேறொருவர் குழந்தையை எடுத்து வளர்ப்பது இயலாத காரியம் என்பதைத் தெரிந்துகொண்டார்.

முத்தம்மாளை ஒரு வாரம் வரை தன் வீட்டிலேயே இருக்க வைத்து அன்னத்திற்கு உடல் தேறியதும் அந்தச் சிறுமிக்கென்று செய்திருந்த நகைகள், தைத்திருந்த துணிமணிகள் எல்லாவற்றையும் ஒரு பெட்டியில் வைத்து, ஆயிரம் ரூபாயையும் முத்தம்மாளிடம் கொடுத்து, ''உங்கள் குழந்தை இனி உங்களோடேயே இருக்கட்டும். தாயை விட்டுப் பிரித்துக் கொண்டுவந்தது என் தப்புதான்'' என்று சொல்லி ரெயில் ஏற்றி விட்டார் செல்வ வந்தர்.

வீட்டிற்கு வந்த முத்தம்மாள் ஓடோடியும் சென்று பசுவின் கன்றைப் பார்த்தாள். அதன் உயிர் இப்போதோ இன்னும் சற்று நேரமோ என்று ஊசலாடிக்கொண்டிருந்தது. தன் கணவனைக் கூப்பிட்டு, ''இந்தாங்க, என் பெட்டியிலே பணமிருக்கு. நூத்தி ஐம்பது ரூபாய் எடுத்துப் போய் உடனே பசுவைத் திரும்ப ஓட்டிவந்திடுங்க. அந்த ஆள் பசுவைக் கொடுக்க முடியாதுன்னு மறுத்தா, கன்றையாவது அங்கே கொண்டு போய் விட்டிடுங்க. நம்ம அன்னம்மா, நான் போகாதிருந்தா, நம்ம குழந்தையா இப்பத் திரும்பி வந்திருக்கமாட்டா. பசுவின் கன்றும், பாவம் நம்ம அன்னத்தைப் போலத்தான் தாயை நினைத்து ஏங்கி ஆகாரம் எடுக்காமெ இருக்குது. இந்தப் பாவத்தை நாம் ஏத்துக்க வேண்டாம்'' என்று ஆவேசத்தோடு சொன்னாள்.

வீரப்பனின் குழப்பமும் ஒருவழியாகத் தீர்ந்தது. பணத்தை எடுத்துக் கொண்டு பக்கத்துக் கிராமத்திற்கு ஓடினான். நல்ல வேளையாக பசுவை வாங்கியவனும் தகராறு செய்யாமல் பசுவை வீரப்பனிடம் ஓட்டிவிட்டான்; தாயும் சேயும் ஒன்று சேர்ந்த அந்த நாளை விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

கல்யாண வீட்டில்—விடைகள்

ஆண்கள்: வேணு, சோமு, ராஜா, கோபு, சீனு.

பெண்கள்: கீதா, ஜயா, கலா, பர்மா, மது.

பாலர் கவி அரங்கம்

ஈடு ஏது?

குப்பை மேட்டுக் களத்திலே
கோழி தரையைக் கிளறுது;
குப்பைப் புழுவைக் கொத்தியே
குஞ்சு தின்னக் கொடுக்குது.

பருந்து ஒன்று வானிலே
பறந்து வட்டம் போடுது;
பார்த்துக் கோழி பதறுது,
பாய்ந்து குஞ்சை அணைக்குது.

சிறகை அகல விரிக்குது,
சின்னக் குஞ்சை மறைக்குது;
பருந்து போன பின்னரே
பரந்த சிறகைச் சுருக்குது.

துன்பம் வந்த போதெல்லாம்
துயரை நீக்கிக் காத்திடும்
அன்னை அன்புக் கீடுதான்
அவனி மீதில் வேறெது?

—ஆர். சரஸ்வதி.

ஐந்தின் பெருமை

சுகி

ஒலிபெருக்கியின் நாதம் என் நடையைத் தடைப்படுத்திற்று. பஞ்சாப் கிராமிய மெட்டுக் கேட்டது. அதன் கிறக்கத்தில் நின்றபோது, மேடைமீது யாரோ வந்தார்கள்.

கைத் தட்டல் படபடவென்றது.

அடுத்த விநாடி, ''சபையோர்களே! உங்களையெல்லாம் ஒரு கை பார்க்கிறேன். பயப்பட வேண்டாம். ஒரு கையை நான் இதோ பார்க்கிறேன். அங்கே இருப்பது என்ன? விரல்கள் ஐந்து. இந்த ஐந்தின் பெருமையைக் கைக்குள் ஒவ்வொருவரும் வைத்திருப்பது போல மனசுக்குள்ளும் வைத்திருக்க வேண்டும். காரணம் நம்முடைய உடம்பு ஐம்புலனால் ஆக்கப்பட்டது. ஐம்புலன்கள் எவையென்று உங்களுக்குத் தெரியும்'' என்று நிறுத்தினார் பிரசங்கி.

ஐம்புலன்கள் எவை என்று யோசித்துப் பார்த்தேன். ஐம்புலனைப்பற்றிய சமயப் பிரசங்கம் நடக்கிறது என்று நடந்தேன். சமயப்பிரசாரம் கேட்டால் என்னுடைய பஞ்சப்பிராணனும் தீமையை விட்டுப்போய்விடும்.

இதற்குள்ளாகப் பிரசங்கி, ''ஐம்புலன் அறிவீர்கள். ஐம்புலனின் பயனையும் அறிவீர்கள். கண்ணை எடுத்துக்கொள்ளுங்கள். தயவு செய்து, ஒருவர் கண்ணை மற்றவர்கள் எடுத்துக் கூட்டத்தில் குழப்பம் செய்துவிட வேண்டாம். (சிரிப்பு) அவரவர் கண்ணையே எடுத்துக் கொள்ளுங்கள். (இன்னும் சிரிப்பு) உங்கள் கண்கள் காண விரும்புவது என்ன? மிகவும் அழகான காட்சியாகக் காண விரும்புவது என்ன?'' என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்டதும், யாரோ ஒரு சின்னப் பயல், சினிமாவில் புகழ் பெற்ற ஆண் - பெண் பெயரைச் சொன்னான். கூட்டம் கலகலவெனத் தட்டியது.

பிரசங்கி, ''கொஞ்சும் கிளிகள் பற்றிச் சொல்லியது வரை ரொம்பவும் சரி. ஆனால், அது பஞ்சவர்ணக்கிளியாக இருந்தால், அடடா, கிளியே அழகு! அதிலேயும் பஞ்சவர்ணக்கிளியின் அழகுக்கு ஈடு இணை உண்டா?'' என்று கேள்வியை நிறுத்தினார்.

''இன்னொரு பஞ்சவர்ணக்கிளி'' என்று ஒரு கீச்சுக்குரல் கேட்டது.

பேஷ், கிளியின்மேலுள்ள பஞ்சவர்ணம் நம் கண்ணுக்கு விருந்து. அதேபோன்று நாக்குக்கு விருந்து என்ன தெரியுமா?''

கூட்டத்தில் ஏதோ முணுமுணுப்பு.

''இதோ சொல்லுகிறேன். நாக்குக்கு விருந்து பஞ்சாமிர்தம்.''

இரண்டொருவர் நாக்கைச் சப்புக்கொட்டும் ஓசையே கேட்டு வந்தது. பிரசங்கியின் வன்மை என்னை உட்கார வைத்தது. என்ன சொல்வதற்கு, எதைப் பற்றிப் பேசுவதற்கு இவர் முயற்சி செய்கிறார் என்று என் ஐம்புலன்களும் முயன்றன.

''பஞ்சாமிர்தம் ஒன்றுக்காகத்தான் குன்றுதோறும் நிற்கும் பழனி மலைக்குப் போகிறோம். அங்கே பஞ்சாமிர்தம் இல்லையென்றால், யார் போவார்கள்?''

"போகவேண்டும்" என்று என் உள்மனம் போராட்டம் செய்தது.

"அன்பர்களே, பஞ்சாமிர்தம் பெறுவதற்காக நீங்கள் பழனிமலைக்கு இன்னொரு நாள் போகலாம். இப்போதே போகவேண்டுமென்று எழுந்து விடவேண்டாம்."

என்னைப்போலவே ஒவ்வொருத்தரும் எண்ணினார்கள் போலும்! கைத்தட்டல் சொல்லி முடியாது.

"கண்ணையும் நாவையும் விருந்தளிக்கும் பஞ்சவர்ணக்கிளியையும், பஞ்சாமிர்தத்தையும் சற்று மறந்துவிட்டு, நீங்கள் செவிக்கு உரிய விருந்து என்னவென்று சொல்ல முடியுமா?"

யாரோ ஒரு குறும்பர், "பஞ்சாலையின் சங்குச் சத்தம்" என்றார். கூட்டம் என்றால் இம்மாதிரி குறும்பர்கள் இருப்பார்கள். பேசியவர்

இதை லட்சியம் செய்யாது, "தியாகையர் கீர்த்தனைகள் ரொம்ப ரொம்ப இனிமையானது. ஆனாலும் கீர்த்தனைகளுக்குள் உயர்வு, அமிர்தத்தில் பஞ்சாமிர்தம்போல மிகவும் சிறப்பானவை, பஞ்சரத்னக் கீர்த்தனைகள்" என்றதும், கூட்டத்தில் ஐம்புலனும் பூரிப்படைய ஆஹாகாரம். பலபல வித்வான்கள் பாடிய பஞ்சரத்னக் கீர்த்தனைகள் கேட்டதுபோல உணர்ச்சி உள்ளத்திலே கோலமிட்டது.

பேச்சாளி, "அன்பர்களே, ஐந்தின் பெருமை தெரிய பேச்சும் அவசியம். ஐந்து விஷயங்கள் பேச்சிலே கவனிக்க வேண்டும். அது என்னவென்று சொல்லுகிறேன். யாரிடம் பேசுகிறோம், யாரைப்பற்றிப் பேசுகிறோம், எப்படிப் பேசுகிறோம், எதற்காகப் பேசுகிறோம், எப்போது பேசுகிறோம்.—இந்த ஐந்து கருத்துக்கள் இல்லாது போனால் பேச்சிலே சுவை இருக்காது. பேச்சுக்கும் ஐந்து தேவை; ஐங்கரன் துணையும் தேவை. கடவுளுக்குள் பெரியவர் ஐங்கரன்தான். ஐங்கரன் பெருமையைச் சொல்லப்போனால்......" என்று கூட்டத்தைக் கண்ணோட்டம் விடுத்தார்.

என் மனத்திலே, "ஐந்தின் பெருமைபாடும் இவர் யார்? இவருக்கும் ஐந்துக்கும் என்ன சம்பந்தம்?" என்ற எண்ணம் ஐந்து விநாடிகள் ஓடியிருக்காது.

"டேய், ராமு, இந்தப் பேப்பரைக் கொஞ்சம் படித்துச் சொல்லேன்! எனக்கு வெள்ளெழுத்து. கண்ணாடி போட்டும் தெரியல்லே!"

"இல்லை தாத்தா, அதிலே எல்லாம் கறுப்பு மையில்தான் எழுதியிருக்கு!"

—ஆ. வெள்ளைக்கண்ணன்.

மீண்டும் ஐந்தைப் பிடித்துக்கொண்டார்.

"இன்னும் ஐந்து நிமிஷங்களில் நான் உட்காரப் போகிறேன். ஐந்திலே வளையாமல் ஐம்பதிலே வளையப்போவதில்லை யென்பதை உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? இன்று உலகமெல்லாம் விரும்பும் கொள்கை என்ன? புத்தர் பிரான் தோன்றிப் புகழோடு நிறுவிய பஞ்சசீலக் கொள்கைபோல, பிரபலமானது வேறு எதுவுமில்லை. உலகமெங்கும் நேருவின் பஞ்சசீலக் கொள்கையை வரவேற்கிறது. நேரு வகுத்த பஞ்சசீலம், புத்தர் கண்ட பஞ்சசீலம்போல, வள்ளுவர் கண்ட பஞ்சசீலங்கள் ஒரு நாட்டுக்கு எவை?"

வள்ளுவர் குறளை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தேன்,

"வள்ளுவர் சொல்லுகிறார்: ஒரு நாடு உருப்பட வேண்டுமானால் ஐந்துபொருள்கள் வேண்டுமென்று சொல்லுகிறார். நோய் இருக்கக் கூடாது; செல்வங்கள் வேண்டும்; நிறைய விளைச்சல் தேவை, இன்பங்கள் பல வேண்டும், காவலுக்குப் படையும் வேண்டும். ஆக ஐந்து தேவை என்கிறார்.

பிணியின்மை செல்வம்
விளைவு இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு
இவ் வைந்து.

ஐந்துக்கும் சுபிட்சத்திற்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்துத் தான் நமது சர்க்கார் வகுத்துள்ள திட்டத்திற்கும் ஐந்தாண்டு திட்டம் என்று பெயர் வைத்துள்ளார்கள்."

கூட்டத்தினர் தத்தம் ஐந்து விரல்கள் சிவக்கக் கை தட்டினர். பிரசங்கி தம்மையும் தமது திட்டத்தையும் மறைமுகமாகச் சொல்ல, தமிழ்மொழி எவ்வளவு லாகவமாகக் கைகொடுக்கிறது என்று எண்ணிக் கொண்டு வீடு திரும்பினேன்.

விகட கவி

விகடகவி மிகவும் வேடிக்கையான பேர் வழி. இந்தக் கணக்கும் அப்படித்தான். முன்னும் பின்னும், குறுக்கும் நெடுக்குமாக, மேலும் கீழும் எத்திசையிலும் செல்லலாம். மொத்தம் எத்தனை வழிகளில் இதைப் படிக்கலாம் என்று கண்டு பிடியுங்கள்.



விடை :- மூன்றாம் அட்டை.

தாடிச் சாமியார்

ஈ. லட்சுமணன்

வல்ல நாட்டு வட்டாரத்தையே கிடுகிடுக்க வைத்துக்கொண்டிருந்தான் பிரபல கொள்ளைக்காரன் காசித்தேவன். அழுதுகொண்டிருக்கும் குழந்தையிடம், 'அதோ காசித்தேவன் வருகிறான்' என்று கூறிவிட்டால் போதும்; கப் - சிப் - என்று இருந்துவிடும். அவ்வாறு பிரபலமடைந்தவன்! அவனது பரந்த மார்பு, கொடூர முகம், துடிக்கும் மீசை, அகன்ற கண்கள், திடகாத்திரமான புஜங்கள் - இவைகளைப் பார்த்தவர்களுக்குக் 'கிலி' பிடித்துக் கொள்ளும். காசித்தேவன் எப்பொழுது வருவான்? எப்படி வருவான்? எங்கே, எந்த நேரத்தில் கொள்ளையடித்துச் செல்வான்? என்பதெல்லாம் புரியாத மர்மமாக இருந்து வந்தது. இருப்பினும் அவனுடைய பாதுகாப்பு இடம் அவ்வூரின் கிழக்கே அமைந்து இருக்கும் பிரம்மாண்டமான குன்றுதான் என்பதையும் அறிந்திருந்தார்கள் அவ்வட்டாரவாசிகள்.

காசித்தேவன் தனிமையாகக் கொள்ளையடித்து வரவில்லை. அவனது கூட்டாளிகளும் ஆறு பேர்கள் இருந்தார்கள். நகரில் கொள்ளையடித்துச் சென்ற பொருள்கள் எல்லாம் அந்தக் குன்றில் அமைந்திருந்த குகைகளில்தான் அடைக்கலம் புகுந்திருந்தன.

அரசாங்கத்தின் பொறுமையை அளவிட முடியாமல் சோதித்துக்கொண்டிருந்தான் காசித்தேவன். தன்னைப் பிடிக்க வரும் போலீஸ் ஜவான்களுக்கே 'டிமிக்கி' கொடுத்துக்கொண்டிருந்தான். இதைத் தெரிந்துகொண்ட அரசாங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டது.

''பிரபல கொள்ளைக்காரன் காசித்தேவனை உயிருடனே அன்றி உடலையோ கொண்டு வருபவர்களுக்கு ரூபாய் ஐயாயிரம் பரிசளிக்கப்படும்.'' இதுதான் அவ் அறிக்கையின் அம்சம். அன்று முதல் அந்தச் செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. யார் முன் வருவார்கள் அவ்வளவு தைரியத்துடன் அவனைப் பிடிக்க?

அன்றொரு நாள்,—

மாலை சுமார் ஆறு மணி இருக்கும். கதிரவனின் இளம் கதிர்கள்



அந்தக் குன்றின் பாறைகள் மீது விழுந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தன. மரங்களடர்ந்த அந்தப் பாறைப் பக்கம் ஒரு சாமியார் தியானத்தில் ஆழ்ந்து இருந்தார். அவருக்கு மிஞ்சிப்போனால் முப்பத்தைந்து வயதுக்கு மேலிராது! வளர்ந்த முடி - அடர்ந்த தாடி - நெற்றியிலே விபூதிப் பட்டை - கழுத்தில் ருத்ராட்சமாலை - கையில் கமண்டலம்-இடையில் காவி உடை - இவ்வளவையும் பூண்டிருந்த கொண்ட அச்சாமியாரின் தியானம் இன்னும் கலையவில்லை. அந்நேரத்தில்....

அவருக்குப் பின் லேசான சலசலப்புச் சப்தம் கேட்டது. ஆம்..; அந்தப் படர்ந்த கொடிகளை விலக்கியவாறு ஓர் முகமூடி அணிந்த உருவம் சாமியார் முன்பு வந்து நின்றது.

'ஏய்! யார் நீ?'' என்று கம்பீரமான குரலில் கேட்டது.

''....''

''உண்மையைச் சொல்கிறாயா? அல்லது இங்கிருந்து உன்னைச் சரிவுக்குக் கீழே உருட்டட்டுமா!'' தனக்கே உரித்தான அதிகாரக் குரலில் அந்த உருவம் வினவிற்று.

''முற்றும் துறந்த பற்றற்ற மனிதன்! பார்த்தாலே தெரியவில்லையா!'' சாமியார் மெதுவாகக் கண்களைத் திறந்து சாதுவாகப் பதிலுரைத்தார்.

''இல்லை... நம்பவில்லை... காசித்தேவனைப் பிடிக்க வந்திருக்கும் அரசாங்கத்தின் கையாள் நீ!''

''ஐயோ, கடவுளே! காசித்தேவன் என்றால் யார் என்றே எனக்குத் தெரியாதே! 'புலியூருக்குப் பயந்து எலியூருக்கு வந்தால் எலியூரும் புலியூர் ஆன' கதையாகிவிட்டதே! என் வாழ்வு இப்படியா அமையவேண்டும்?'' எனக் கூறியதும் அவர் முகத்தில் கவலை ரேகை படர ஆரம்பித்தது. கண்களில் நீர் குளம் போல் கட்டி நின்றது.

''பிரபல கொள்ளைக்காரன் காசித்தேவனைப் பற்றிக் கேள்விப்படாதிருப்பது எனக்கே வியப்பை அளிக்கிறது. இதோ நான்தான்! நன்றாகப் பார்த்துக் கொள்ளும்'' என்று கூறி அந்த உருவம் தன் முகமூடியையும், கறுப்புக் கண்ணாடியையும் அவிழ்த்தது. ஆம்! காசித்தேவனேதான்!

எடுப்பான அவனது உருவத்தைப் பார்த்த சாமியாருக்கு மனம் 'திடுக்' எனப் பதறியது. இருந்தும் தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

''அப்பனே! நீ என் வாழ்க்கையைச் சிறிது கேள்விப்பட்டால் உனது கல் நெஞ்சமும் சிறிதாவது கலங்கும். இதோ கேள்!'' எனத் தம் கதையை விவரிக்க ஆரம்பித்தார் சாமியார்.

''நான் ஓர் ஏழை. அதிலும் பரம ஏழை. இந்நிலையில் என் குழந்தைகள் வேறு, மனைவி, நான் - ஆக நான்கு பேர்கள் இருந்தோம். வல்ல நாட்டில் அமைந்திருக்கும் பிரபல ராம் சேட் பவுன் கடையில் வேலை பார்த்து எங்கள் ஏழைமை நிலையை நீக்கி வந்தேன். அது சமயம் காலம் செய்த சதியால் என் மக்கள் இருவரும் 'காலரா'வில் அடித்துச் செல்லப்பட்டனர். மனைவியும் காலராவால் யமனிடம் போராடிக்கொண்டிருந்தாள். இதைக் கண்ட உற்றார் - உறவினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லக் கூசினார்கள். கையிலோ காசில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை! முதலிலேயே சம்பளத்திற்கும் அதிகமாக ராம்சேட்டிடம் கடன் வாங்கியிருந்ததால் - அவர் எனக்குப் பணம் தர மறுத்தார். மனைவியின் நிலையைக் கூறினேன்; விடாப்பிடியாக மறுத்தார். அவர் வெளியில் சென்ற சமயம் ரூபாய் இருபது மட்டும் எடுத்துவிட்டேன். வெளியில் சென்ற சேட் வந்து யாருக்கோ பணம் கொடுக்கும் நோக்கத்துடன் பெட்டியைத் திறந்தார். ரூபாய் இருபதைக் காணவில்லை. அவர் கடையில் வேலைபார்க்கும் அத்தனை பேரையும் விட்டு விட்டு என்னைத் திடீர் எனச் சோதித்தார். பணம் என் பையில் இருப்பதைக் கண்டு, 'உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்யத் துணிந்த துரோகியே! ஒழிந்து போ!' எனக் கர்ண கடூரமான குரலில் என்னை அடித்து உதைத்து கடையின் வெளியே

தள்ளினார். சாகக் கிடக்கும் மனைவியைக் காப்பாற்றப் பணத்தைத் திருடினேன். அதையும் பறி கொடுத்து வீட்டிற்கு வந்தேன்; அங்கே மனைவியின் பிணத்தைத் தான் கண்டேன். அதிலிருந்து என் மனம் மாறியது. ராம்சேட்டைப் பழிக்குப் பழி வாங்க எண்ணினேன். பாழும் மனம் இடம் கொடுக்கவில்லை; அன்றிலிருந்தே இக்கோலமானேன்.'' அவர் தம் கதையைச் சுருக்கமாய் முடித்ததும் அவர் கண்களினின்று நீர் பொல பொலவென உதிர்ந்தது.

'எறும்பு ஊறக் கல்லும் தேயும்' என்பார்கள். அவர் கதையைக் கேட்ட காசித்தேவனின் மனமும் கலங்கி இளகியது. உடனே அவரைத் தன்னுடன் வசிக்குமாறு வேண்டினான். முதலில் அவனுடன் வர மறுத்த சாமியார் அவனது விடாப் பிடியால் அவனுடன் அந்தக் குன்றில் யாரும் கண்டு பிடிக்க முடியாத மர்மக் குகைக்குச் சென்றார். அங்கே....

அந்தக் குகையில் தீப் பந்தங்கள் இருட்டை விலக்கிக்கொண்டிருந்தன. ஏராளமான பொன்னும் பொருள்களும் சிதறிக் கிடந்தன. விலையுயர்ந்த பட்டாடைகள், வெள்ளிச் சாமான்கள் எல்லாம் அங்கே விற்றிருந்தன. நரியின் தோல்கள் கிடந்தன. இவற்றைக் கண்ட சாமியாரின் மனத்தில் ஆசைப் பேய் குடிகொண்டது. இருந்தும் வெளிக்காட்டவில்லை.

இரவும் பகலும் மாறி மாறி ஒரு வாரத்தைக் கழித்து விட்டன. சாமியார் தமக்கு உரித்தான இடத்தில் அமர்ந்து கொண்டு காசித்தேவனிடம், 'ராம்சேட் பவுன் கடை'யை எவ்வாறு கொள்ளையடிப்பது என்பது பற்றித் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். முடிவில் மறுநாள் காலையில் சாமியார் மட்டும் நகருக்குச் சென்று உளவறிந்து வந்த பின் இரவில் நடு நிசியில் கொள்ளையடிப்பது என்று முடிவு செய்தனர்.

மறு நாள்....

மயக்கும் மாலைப் பொழுது விரைந்து சென்று கொண்டிருந்தது. நகரை உளவறிந்து விட்டுச் சாமியார் குகைக்கு வந்து காசித்தேவனிடம் தெரிவித்தார்.

''தேவா! இன்று நடுநிசியில் நமக்குச் சரியான வேட்டைதான். ஏதோ ஒரு திருமண விஷயமாக சேட் பம்பாய் சென்றிருக்கிறாராம். அவர் கணக்குப் பிள்ளை



''டேய், நாம்ப ரெண்டு பேரும் எல்லாம் படிச்சு பெரியவனு ஆனப்புறம், ரஷ்யாவுக்குப் போகலாமாடா?''

''அம்மாடியோ! நான் அங்கே வரவே மாட்டேன்! அங்கே கரடி இருக்கு!''

விடம் கடையை ஒப்படைத்து விட்டுச் சென்றிருக்கிறார்'' எனச் சாமியார் கூறியதும் காசித்தேவன் ஆனந்தத்தால் துள்ளினான். சாமியாரைத் தன் கரங்களால் தூக்கிக் கொண்டு நடனம் ஆடினான். உற்சாகம் அவன் உள்ளத்தில் கரை புரண்டு ஓடியது. 'காணாதவற்றைக் கண்டவன் போல்' களிப்பில் ஆழ்ந்தான்.

இரவு நடுநிசி! இருளரக்கன் தன் ஆட்சியைப் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தான். மேலும் அன்று அமாவாசையும்கூட.

காசித்தேவனும் அவனது ஆட்களும் - சாமியார் உள்பட எட்டுப் பேர்கள் - வல்ல நாட்டின் நகருக்குள் ராம்சேட் கடையை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர். காசித்தேவனைக் கண்ட நாய்கள் கூடக் கதிகலங்கி ஓட்டம் பிடித்தன. மின்சாரத் தட்டுப்பாட்டினால் தெரு விளக்குள் அணைக்கப் பட்டிருந்தன. 'ஊரைத் தானே காப்பாற்ற வேண்டும்' என்ற நோக்குடன் காவல் புரிந்துகொண்டிருந்த கூர்க்காவை வளைத்து அடித்துக் கட்டிவிட்டான் காசித்தேவன். இந்தக் காட்சியைக் கண்ட சாமியார் இதயம் கலங்கியது.

அக்கம் பக்கம் பார்த்துவிட்டு ராம்சேட் கடையின் பூட்டைத் தம் கையிலுள்ள கொத்துச் சாவிகள் மூலம் லாவகமாகத் திறந்தார். அனைவரும் உள்ளே சென்றார்கள். மின்சார சுவிட்சைத் தேடி விளக்கைப் போட்டார்கள். ''யாரும்வருகிறார்களா?'' என்று பார்க்கிறேன் எனத் தேவனிடம் கூறிவிட்டு வெளியே வந்தார் சாமியார்.

''அலமாரியில் ஜொலித்துக் கொண்டிருந்த பவுன் சங்கிலிகள், விலையுயர்ந்த சாமான்கள் அத்தனையும் காசித்தேவன் பையில் அடைக்கலம் புகுந்தன. விலை மதிக்க முடியாத வெள்ளிச் சாமான்கள், வைரக் கற்கள் எல்லாம் அவனால் கையாளப்பட்டு விட்டன.

டுமீல்....டுமீல்....!

இந்தப் பேரொலியுடன் போலீஸ் ஜவான்கள் நீட்டிய துப்பாக்கியுடன் கடையை வளைத்துக் கொண்டனர். வேட்டுச் சப்தத்தைக் கேட்டதும் மின்சார விளக்குகள் 'பளிச்'சென மின்னின. ஆம்! அது முன்னேற்பாடுதான். போலீஸ் ஜவான்களைக் கண்டதும் காசித்தேவனின் கலங்காத இதயம் குழம்பிற்று. சுருங்கக் கூறின் காசித்தேவனும் அவனது ஆட்களும் கைதானார்கள்.

மறுநாள் செய்திப் பத்திரிகையில்..... ''பிரபல கொள்ளைக்காரன் காசித்தேவன் அகப்பட்டான். தாடிச் சாமியார் வேடம் போட்டு, காசித்தேவனைப் பிடிக்கக் காரண கர்த்தாவாயிருந்த ஸி. ஐ. டி. சுப்பையாவுக்கு விரைவில் பதவி உயர்வும் ரூபாய் ஐயாயிரம் பரிசும் அளிக்கப்படும்..'' என்ற செய்தி வெளி வந்ததும் ஸி.ஐ.டி. சுப்பையாவை வாழ்த்திப் பல தந்திகளும் தபால்களும் வந்து குவிந்தவண்ணம் இருந்தன. அவ்வட்டார வாசிகளும் தங்கள் பாராட்டுக்களை நேரில் தெரிவித்து மகிழ்ந்தார்கள்.

உண்மை

பி.கே. சாமி

ஒரே ஓர் ஊரிலே மிகவும் கெட்டிக்காரனான கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் இருளப்பன். அவன் இரவில் தான் கொள்ளைக்குச் செல்வான்.

அதே ஊரில், மிகவும் திறமைசாலியான பகல் கொள்ளைக்காரன் ஒருவனும் இருந்தான். அவன் பெயர் பக்கிரிசாமி.

ஒரே ஊரில் இருந்தபோதிலும் அவர்கள் இருவரும் இதுவரை சந்தித்துக் கொண்டதில்லை. ஒருவருக்கொருவர் பரிசயமும் கிடையாது.

எனவே, ஒரு நாள் இருளப்பன் பக்கிரிசாமியைப் போய்ப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டான்.

அக்கம் பக்கம் விசாரித்து, பகல் கொள்ளைக்காரப் பக்கிரிசாமியின் வீட்டை அடைந்து, வாசற்கதவைத் தட்டினான் கொள்ளைக்கார இருளப்பன்.

கதவு திறக்கப்பட்டது.

அவன் வந்த நேரம் பகல் ஆனபடியால் பக்கிரி வீட்டில் இருக்கவில்லை! அவன் மனைவி மட்டுமே இருந்தாள்.

''எப்போது வந்தால் பார்க்கலாம்?'' என்று கேட்டதற்கு, ''ராத்திரி வேளையிலே எப்போ வேணுமானாலும் வாருங்க; இருப்பாங்க!'' என்றாள் அவள்.

''ராத்திரி வேளையிலே எனக்கு 'வேலை' இருக்குமே, அம்மா! எப்படி வர முடியும்?'' என்று யோசித்தான் இருளப்பன். அவன் இராக் கொள்ளைக்காரன் அல்லவா?

அவன் தயங்கி நிற்பதைப் பார்த்த பகல் கொள்ளைக்காரன் மனைவி, ''அப்படியானா பொங்கல் அன்னிக்குப் பகலிலே வாருங்க! அன்னிக்கு ஒரு நாள் அவருக்கு லீவு. வீட்டில்தான் பூரா இருப்பாரு. கண்டிப்பாப் பார்க்கலாம்!'' என்று சொல்லி அனுப்பினாள்.

''அப்படியே வருகிறேன்'' என்று விடைபெற்றுச் சென்றான் இருளப்பன்.

நாட்கள் விரைந்து நகர்ந்து, பொங்கலை இழுத்து வந்தன.

அன்றுதான் பண்டிகைத் தினம்.

சொன்னால் சொன்னபடி நடப்பான் இருளப்பன், ஆதாயம் உள்ள விஷயத்தில். பொங்கலன்று பகல் பத்து மணிக்கு, பக்கிரியைத் தேடி வந்துவிட்டான் அவன்.

இரண்டு பிரபல திருடர்களும் பரஸ்பரம் அறிமுகம் செய்து கொண்டார்கள். பக்கிரிசாமியும் இருளப்பனை நன்றாக உபசரித்தான்.

* * *

இருவரும் உணவு அருந்தி, தாம்பூலம் போட்டுக் கொள்ள அமர்ந்தனர்.

அவர்களின் முதல் சந்திப்பு மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

அந்தச் சந்திப்பின் அடையாளமாக, பக்கிரிசாமிக்குக் கொடுத்துப் போகவென்று பரிசுப் பொருள் ஒன்று கொண்டு வந்திருந்தான் இருளப்பன். அதை அவிழ்த்து வெளியே எடுத்துப் பக்கிரியிடம் நீட்டினான் அவன்.

''நம்முடைய முதல் சந்திப்பின் நினைவாக இது என் அன்பளிப்பு!'' என்றான் அவன்.

அதைப் பார்த்தவுடனே பகல் கொள்ளைக்காரப் பக்கிரிசாமியின் முகத்திலே அப்படிப்பட்ட மாறுதல் ஏன்? அவ்வித மாறுதலை ஏற்படுத்திய அந்தப் பொருள்தான் என்ன?

வேறு ஒன்றும் பிரமாதமாக இல்லை. குறைந்தால் இரண்டாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள ஒரு வைரமோதிரம்தான் அது!

ஆனால்—

அது பக்கிரிசாமியின் முகத்திலே விகாரமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம்?

காரணம் இருக்கிறது. விவரம் இதுதான்:



* * *

ஒரு வாரத்துக்கு முன்பு, பட்டப் பகல் பன்னிரண்டு மணி வேளையில் ஒரு நகைக்கடையில் வாடிக்கையாளர் மத்தியில் நின்ற பகல் கொள்ளைக்காரப் பக்கிரிசாமி, சற்று நேரத்தில் 'ஒன்றும் பிடிக்கவில்லை' என்று சொல்லி வெளியேறி விட்டான்.

சும்மா வெறும் கையுடன் போவானேன் என்று எண்ணி ஒரு வைரமோதிரத்துடன் கம்பி நீட்டி யிருந்தான்!

பாழடைந்த கோவில் முன்பாக வரும்போது எதிரே போலீஸ் வந்தது. சரேலென்று கோவிலுக்குள் நுழைந்து மறைந்து, அதன் இருண்ட பகுதியிலிருந்த பொந்திலே மோதிரத்தை ஒளித்து வைத்து விட்டு, ஒன்றும் நடவாதது போல் நடையைக் கட்டினான் பக்கிரி.

மறுநாள் சென்று பார்க்கையில் அது வைத்த இடத்தில் இல்லை,

''யார் எடுத்திருப்பார்கள்?'' என்று திகைத்துப் போனான் பக்கிரிசாமி. அதற்கு விடை இதோ வந்துவிட்டது.

* * *

''என்ன யோசனை?'' என்று கேட்டான் இருளப்பன்.

''ஒன்றுமில்லை! வந்து...இதை நீங்கள் எங்கே ....?'' என்று இழுத்தாற் போலக் கேட்டான் பக்கிரிசாமி, பதிலுக்கு.

உள்ளபடியே நடந்ததைச் சொன்னான் இருளப்பன். ஏழு தினங்களுக்கு முன் ஓர் இரவில்- திருடப்போன இடத்தில் ஆட்கள் விழித்துக் கொண்டதும், தப்பியோடிச் சென்று பாழடைந்த கோவிலில் ஒளிந்திருந்ததும், பாட்டரி வெளிச்சத்தில் பொந்திலே கண்டு எடுத்து வந்ததையும் விவரித்தான் இருளப்பன்.

விவரம் கேட்டு அறிந்த பக்கிரி, ''பகல் கொள்ளை அடிக்கிறவங்க சேர்க்கிற பொருள்கள் எல்லாம் இராக் கொள்ளைக்காரங்க கையிலேதான் சிக்கும்போல இருக்குது. இல்லீங்களா?'' என்று முணுமுணுத்தான், புன்சிரிப்போடு!

தமாஷாகப் பேசும் இயல்புடையவன் அவன்.

இருளப்பனுக்கு சட்டென்று ஒன்றும் புரியவில்லை. இருந்தும் தயங்கியவாறே அவன், ''நீங்க சொல்றது நூத்துக்கு நூறு உண்மைதானுங்க!'' என்று ஆமோதித்தான், **கவனமெல்லாம் வேறு எங்கோ நிலைத்தவனாக.**


புலிக்குட்டி தூங்கவிருந்த சமயம்...
ஆ! உதவி! ஆபத்து!
அவன் அவர்களை நோக்கி ஓட எண்ணிய போது பின்னால் ஒரு காதி........
வேங்கை வீரரே! ஆபத்து! ஆபத்து!
என்ன?

இளவரசியை யாரோ தூக்கிச் செல்கிறார்கள்!
ஆ! என்ன! இளவரசியையா!
அவர்கள் யாரென்று தெரியவில்லையே!
அதோ அந்தப் பக்கம்!
எங்கே?
என்ன?
இதோ இப்படி!

புலிக்குட்டி மட்டும் தாதி
யுடன் அவர்களை யெல்லாம்
கடந்துகோட்டை வாயில்
அடைகிறான் . . . . . .
ரதம் செல்கிறது.
ஆனால், பாலம் மூடிக்
கொண்டிருக்கிறதே!
இங்கே உளவாளி
யாராவது இருக்கத்
தான் வேண்டும்!
புலிக்குட்டி இவ்வாறு கூறிவிட்டு
கொம்பு எடுத்து ஊதுகிறான்...
பகைவன் தப்
பித்து விட்டான் இள
வரசியோடு! ஆனால்
யாரோ துரோகி
இங்கே பதுங்கியிருக்
கிறான்! பிடியுங்கள்!

(தொடரும்)

ரிஸல்ட் வந்தது!

ராம்நாத்

செனட் ஹாலில் ஒட்டப்பட்டிருந்த 'இன்டர் ரிஸல்ட்'டைப் பார்த்த கோபு அப்படியே மயக்கம் போட்டு விழுந்து விடவில்லை! காரணம் அந்த வருஷம் பரீட்சையில் நிச்சயம் 'கோட்' என்பதுதான் அவனுக்கு முன்பே தெரிந்த விஷயமாயிற்றே! அப்போது அவன் எண்ணியதெல்லாம், 'நம்ம பையன் கட்டாயம் பாஸ் பண்ணி எதிர் வீட்டுச் சோமுவின் மூஞ்சியில் கரியைப் பூசிவிடுவான்' என்று கனவு கண்டுகொண்டிருக்கும் அப்பாவின் அடிக்குத் தப்புவது எப்படி என்பதுதான்!

அப்பொழுது மின்னலைப் போல் 'பளிச்' சென்று ஒரு யோசனை அவனுக்குத் தோன்றியது. சுற்று முற்றும் பார்த்தான். தெருக் கோடியில் முடங்கிக் கிடக்கும் ரிக்ஷாக்காரனைக் கண்டதும் சந்தோஷத்துடன் அவனருகில் விரைத்தான்.

''ஏய், துரைசாமி முதலியார்த் தெருவுக்கு எவ்வளவுடா காசு வேணும்?'' என்றான்.

''எட்டணா கொடுங்க, சாமி!''

''இதோ பாரு, நான் எப்படிச் சொல்றேனோ அப்படி நடந்தால் எட்டணா என்ன, உனக்கு ஒரு ரூபாய்கூடக் கிடைக்கும். தூரத்திலிருந்தே நான் எங்கள் வீட்டைக் காண்பிப்பேன். வண்டியோடு எங்கப்பா கிட்ட வந்து, 'சாமி! இவுரு பரீட்சையிலே பெயிலாப் போனதைக் கேட்டு மூர்ச்சை போட்டுட்டாரு; நாலைஞ்சு பையங்க என்னைக் கூப்பிட்டு இந்த நம்பர் வீட்டிலே விடச் சொன்னாங்க!' என்று சொல்லணும். என்ன? சொல்லுவியா?'' என்றான்.

''அதுக்கென்னங்க, இதுதானா

பிரமாதம்!'' என்றான் ரிக்ஷாக் காரன்.

''அப்ப சரி; இந்தா ஒரு ரூபாய்!'' என்று பையிலிருந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தான் கோபு.

மலர்ந்த முகத்துடன் அந்த ரூபாயை வாங்கி ரிக்ஷாக்காரன் அவசர அவசரமாக மடியில் செருகிக் கொண்டான்.

ரிக்ஷாக்காரனிடம் விஷயத் தைத் தெரிந்துகொண்ட கோபு வின் தகப்பனார் அலறிப் புடைத் துக்கொண்டு அவனைப் படுக்கை யில் கிடத்தி இரண்டாவது பிள்ளை பாலுவிடம், ''டேய்! டாக்டர் சிரஞ்சீவியைக் கையோடு அழைத்து வா!'' என்று உத்தரவிட்டு விட்டு மீண்டும் கோபுவை ஆசுவாசப் படுத்துவதில் முனைந்தார்.

''போனால் போகிறதடா! அடுத்த வருஷம் ஜாக்கிரதையாகப் படித்துப் பாஸ் செய்தால் போகி றது. கவலைப்படாதே!'' என்று தேறுதல் கூறினார். அவருடைய மனைவி ஒரேயடியாக ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள். இந்த அமர்க்களத்தில் சமயத்தை நழுவ விடாமல் ரிக்ஷாக்காரன் அவரிட மும் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு சென்றான்.

சென்றவன் சிறிது நேரத்திற் கெல்லாம் மீண்டும் திரும்பி வந் தான். ''சாமி. இந்த ரூபாய் செல்லாதுங்களே, டீக்கடைக் காரன் வாங்கிக்க மாட்டேங்கிறா னுங்க'' என்றான்.

''நான் எங்கேடா முழு ரூபாய் தந்தேன்? ரெண்டு எட்டணான்னு கொடுத்தேன்?'' என்றார் கோபு வின் தந்தை கோபமாக.

''நீங்க இல்லீங்க! சின்ன ஐயா தான் ஏமாத்திப்புட்டாரு. 'டேய், மயக்கம் போட்டு விளுந்தேன்னு எங்கப்பாருகிட்ட சொல்லு, ஒரு ரூபாய் தாரேன்'னு. கடைசியிலே செல்லாத ரூபாயைக் கொடுத்துப் புட்டாரு!'' என்றான்.

அவ்வளவுதான்! கோபுவின் தகப்பனார் பிரளய கால ருத்திர னைப் போல் கோபத்துடன் ஒரு 'ஹூங்காரம்' செய்தார். ''பயலே! என்னையே ஏய்க்கவா பார்க்கிறே?'' என்று கோபுவின் பக்கம் திரும்பி னார்.

அதுவரை படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த அவன் அவரது அடிகளை வாங்கிக்கொள்ள அவ் வளவு பைத்தியமா, என்ன?

உழைத்த பணம்

ஆர். என்.

கோட்டைக்குப்பம் கோடீசுவரம்பிள்ளை சிறுவயது முதல் கடும் உழைப்பினுலேயே முன்னுக்கு வந்தவர். அவருக்கு அருமை மகன் ஒருவன் இருந்தான். ஆனுல் அவன் காலை முதல் இரவு வரை ஊரைச் சுற்றி, வீண் பொழுது கழித்து வந்தான். பள்ளிப் படிப்பும் அவனுக்குக் கசப்பாக இருந்தது. வேலை செய்வதென்ருலும் சோம்பேறித்தனம். இருந்தபோதிலும் ஒரே பிள்ளையாதலால் அவர் பிள்ளையைப்பற்றிக் கவலைகொண்டார். அவனைத் திருத்தி நேர் வழிக்குக் கொண்டுவரத் தீர்மானித்து மகனைக் கூப்பிட்டுச் சொன்னுர். ''மகனே! இனி நீ தினந்தோறும் பகல் சாப்பாட்டுக்கு வரும்போது ஒரு ரூபாய் என்னிடம் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். அப்போதுதான் உனக்குச் சாப்பாடு கிடைக்கும்'' என்ருர்.

''ஒரு ரூபாய்தானே? இது என்ன பிரமாதம்!' என்று சொல்லிவிட்டுச் சென்ருன் மகன்.

மறுநாள் சாப்பாட்டுக்கு வரும்போது நல்ல பசி. ஆனுல் அதுவரை தந்தையின் கட்டளை அவனுக்கு ஞாபகமேயில்லை. உடனே மாமாவிடம் சென்ருன். ஒரு ரூபாய் கேட்டு வாங்கி வந்து தந்தையிடம் கொடுத்தான். அவர் அதைக் கையில் வாங்காமல், ''தோட்டத்திலுள்ள கிணற்றிலே விட்டெறிந்துவிடு'' என்று சொன்னுர். அப்படியே செய்துவிட்டுச் சாப்பிடச் சென்ருன்.

மறுநாள் அத்தையைக் கேட்டு ஒரு ரூபாய் வாங்கிவந்தான். இதேபோல ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் உறவினரிடமும் சென்று ஒரு ரூபாய் வாங்கி, தந்தையிடம் கொடுத்துக் கிணற்றிலே போட்டு வந்தான். சில நாட்கள் கழிந்ததும் கேட்க உறவினர் யாருமில்லை.

'இன்றைக்கு நானே ஒரு ரூபாய் சம்பாதித்துக் கொண்டு வரப் போகிறேன். ஒரு ரூபாய்தானே! என்ன பிரமாதம்!' என்று எண்ணி வெளியே புறப்பட்டான்.

பலபேரிடம் சென்று வேலை ஏதாவது தரும்படி கேட்டான். எல்லாரும், ''பணக்காரன் வீட்டுப் பிள்ளை! நீயா வேலை கேட்க வந்துவிட்டாய்? உன்னுல் என்ன செய்ய முடியும்?'' என்று கூறினுர்கள். கடைசியில் கருமான் ஒருவன் தன் பட்டறையில் இரும்பை நெருப்பில் காய்ச்சி ஓங்கி அடித்துக்கொண்டிருந்தான். அவன் களைத்துப் போயிருந்தபடியால் இவன் போய் வேலை கேட்டதும், சரி என்று ஒப்புக்கொண்டான். நெருப்பு அனலில் உலைக்கூடத்தில் வேலை செய்தான் அந்தச் சிறுவன். அவன் தளிர்க்கரங்கள் கன்றிப் போய்விட்டன. முகம் சிவந்தது. உடலெல்லாம் வியர்வை ஆருகப் பெருகியது. பெருமூச்சுடன் கடும் உழைப்புக்குப் பின்னர் கால் ரூபாய்தான் கூலி கிடைத்தது. அதைப் பெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான் அவன்.

அந்தக் கால் ரூபாயை வழக்கம் போல் தந்தையிடம் கொண்டு கொடுத்தான். உடனே அவர் வழக்கப்படி, ''சரி; போனுல் போகிறது; அதைக் கிணற்றிலே வீசியெறிந்துவிட்டுச் சாப்பிட வா!'' என்ருர்.

''கிணற்றிலே எறியவா? ஏன்?'' என்று கேட்டான் சிறுவன். ''நான் இந்த ரூபாயைப் பெற எத்தனை கஷ்டப்பட்டேன், தெரியுமா? இது நான் வியர்வை சிந்த உழைத்த பணம்!'' என்ருன் அவன். தந்தை இதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுடன் பணத்தின் அருமையைத் தெரிந்துகொண்ட அவனைப் பாராட்டினுர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

திருநெல்வேலி: கிளைக் கழகத்தின் சார்பில் நாடகப் போட்டி ஒன்று
வக்கப்பட்டுள்ளது. நாடகம் கண்ணன் அளவில் மூன்று பக்கங்கள்
லாம். நாடகம் அனுப்பவேண்டிய முடிவுத் தேதி 30-12-56. தேர்ந்
டுக்கப்படும் நாடகத்தை 'மணி மலர்' மன்றத்தினர் பொங்கல் தினத்
று நடித்துக் காட்டுவது என்றும் தீர்மானித்துள்ளனர். தேர்ந்
டுக்கப்படும் நாடகத்துக்கு ரூ. 2/- சம்மானம் அளிக்கப்படுமாம்.
வரங்களுக்கு கே. வி. ராமன், 11. வரதராஜபுரம், திருநெல்
வலி ஜங்ஷன் என்ற விலாசத்துக்கு எழுதிக் கேட்கலாம்.

பேனா நண்பர்கள்

1. கே. வி. ராமன், 11. வரதராஜபுரம், திருநெல்வேலி ஜங்ஷன்.
2. எல். எல். ராஜேந்திரன், 8. பந்தடி குறுக்குத் தெரு, மதுரை.
3. எம். கே. நடேசன், 28. லக்ஷ்மிபுரம் முதல் தெரு, மதுரை.
4. வி. ஜயராமன், 'கொண்டல்' தோட்டம், குத்தாலம், தஞ்சை ஜில்லா.
5. கே. குருசாமி, c/o N. RM. கிருஷ்ணசாமி, சொக்கலிங்கம் செட்டியார் வீதி, காரைக்குடி.
6. ஏ. ஆர். மோகன், ஐந்தாம் படிவம், சர் சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை ஜில்லா.
7. எஸ். பி. சொக்கலிங்கம், நடராஜபுரம் போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா.
8. கே. ஆர். சம்பத்குமார், 176. தங்கசாலைத் தெரு, சௌகார் பேட்டை, சென்னை-1.
9. ஆர். காமேஷ்குமார், 1/2, 7-ஆவது தெரு, சௌராஷ்டிரா நகர், சென்னை-24.
10. வி. ம்காலிங்கம், 278, ராஸ்தா பேட்டை, புனா-2.
11. சி. கே. தமிழன்பன், 17, மெயின் ரோடு, நேபோடகளுத்துறை தெற்கு, இலங்கை.
12. சி. லிங்கேச்வரநாதன், ஸ்டான்லி அரசினர் மத்தியக் கல்லூரி, ஆண்கள் விடுதிச்சாலை, யாழ்ப்பாணம், இலங்கை.

விடைகள்

விகடகவி: மொத்தம் எண்பது விதங்களில் படிக்கலாம்.

சென்ற இதழ் வேடிக்கைக் கணக்குகள்

(1) +, −, ×; ×, −, +; +, +, +; +, −, ×.

(2) விடைகள் எல்லாம் 1, 4, 2, 8, 5, 7 எண்களால் ஆனவை.

(3) 2, 4, 18; 12, 14, 18, 16, 6, 10.

(4) பட்டு, இந்து.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M.

12

நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

கண்ணன் புதிய வெளியீடுகள்

லீடர் மணி - ஆர்வி ரூ. 1

இளைய தாயாரின் கொடுமைகளுக்கிடையே கிராமத் பள்ளிப் படிப்பை முடிக்கிறான் மணி. மேலே படிக் பக்கத்து நகரத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் செல்கிற அங்கேயும் அவர்கள் கொடுமை தாங்காமல் நடு இரவி வெளியேறிவிடுகிறான். வழியில் நண்பனாக வரும் கங்க ஆசை காட்டி அவனைச் சென்னைக்கு அழைத்துச் சென் நடுத்தெருவில் விட்டுச் செல்கிறான். பலவித இன்னல்களைய சமாளித்தவாறே விடாமுயற்சியுடன் நன்றாகப் படித் வெற்றி பெறுகிறான். லீடர் தேர்தலில் அவனை நண்பர்க தேர்ந்தெடுக்கிறார்கள். படிக்கப் படிக்கத் தெவிட்டா கதை. சுவையான சம்பவங்கள். சிறுவர் ஒவ்வொருவ படித்து ரசிக்க வேண்டிய அழகிய நாவல்.

அசட்டுப் பிச்சு - 'ஆர்வி' ரூ. 1 0

ஏ. பி. என்ற பையனை ஊரில் உள்ள மற்ற நண்பர்கள் அசட்டுப் பிச்சுவாக்கி விடுகிறார்கள். அவன் நடையும் உடையும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அவன் அதிருஷ்டமோ அளவிட முடியாமல் இருக்கிறது. பெரிய பெரிய திருட்டுக்களையெல்லாம் அநாயாசமாகக் கண்டு பிடித்து விடுகிறான் அவன். பெயரும் புகழும் அவனைத் தேடி வருகின்றன. அடுக்கடுக்கான சம்பவங்களும் அழகான சம் பாஷணைகளும் நிறைந்த அருமையான கதை.

அபாயச் சங்கு - நீலம் ரூ. 0 8 0

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பி னால் அடங்கிவிடுவான் என்று நினைக்கிறார்கள். ஆனால் புறப் பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் கா கிறான் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கி அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது. சுவாரஸ்ய விறுவிறுப்பும் நிறைந்த கதை.

அடுத்து வருபவை: கவிஞர் கதை, தங்க மாம்பழம் மற்றும் பல அரிய புத்தகங்கள்.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.